விலை ரூபா: 8.00
Registered as a News paper in Sri Lanka
வலம்புரி
Valampurii
பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 14 திங்கட்கிழமை (31.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 316

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# இராணுவப் புலனாய்வுத்துறையின் உயர் அதிகாரி ரிஸ்வி சுட்டுக்கொலை!

## அவரது வீட்டிற்கு அருகில் சம்பவம்

(கொழும்பு)

**இராணுவப் புலனாய்வுத்துறையின் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான லெப்.கேணல் துவான் ரிஸ்வி மீடின் (வயது 39) இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.**

**நண்பர் ஒருவருடன் தனது வாகனத்தில் வெளியே சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் அவரது வீட்டிற்கு அருகில் வைத்து நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் அவர் சுடப்பட்டார்.**

சுடப்பட்ட அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காமையினால் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது கழுத்திலும் தலையிலும் துப்பாக்கிச் சூடு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர் சுடப்பட்ட விவகாரம் குறித்து அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் அறிந்துகொண்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசி அழைப்பை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்றுபார்த்தபோது அவர் படுகாயமடைந்த நிலையில் அவரது வாகனத்திற்குள் மயங்கிக் கிடந்ததாகவும், பின்னர் கொழும்பு தேசிய வைத்திசாலைக்குக் கொண்டுசென்று சேர்ப்பித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவருக்கு அடுத்த வருடம் மேமாதம் (12 ஆம் பக்கம் பார்க்க)



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரப் பகுதியில் உள்ள நடைபாதை நிலையங்கள், புடவை வியாபாரம் களை கட்டியுள்ளது. அதனையே படத்தில் காணலாம்.

## வாகரையில் புலிகள் மீது தாக்குதல் போராளி ஒருவர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நேற்று அதிகாலை ஊடுருவிய கருணா குழுவினர் எனச் சந்தேகிக்கப்படும் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

வாகரைப் பிரதேசத்தின் மதுரங்கேணி குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் மயிலங்கிறிச்சியைச் சேர்ந்த பார்த்தீபன் எனப்படும் கதிர்காமத் தம்பி செல்வன் என்ற போராளியே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில், தாக்குதலை நடத்தியவர்களில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில் தபால் நிலையம் மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல்

### இரு பொலிஸார்; இராணுவச் சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தபால்நிலையம் மீது காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் மீது நேற்றிரவு 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸார் மற்றும் இராணுவச் சிப்பாய் ஆகிய மூவரும் படுகாயமடைந்துள்ளனர்.

கோண்டாவில் தபால் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்காளர் அட்டைகளுக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் மீது மீசாலையில் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் பகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிச்சென்ற இராணுவ வாகனம் மீது நேற்று மாலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 6.40 மணியளவில் மீசாலையில் வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது இரண்டு இராணுவச் சிப்பாய்கள் இருந்ததாகவும், எனினும் அவர்கள் எந்தவித காயமுமின்றி தப்பிக்கெண்டதாகக் தெரிவிக்கப்பட்டது. எனினும் இத் தாக்குதலில் அவ் வாகனம் சேதத்திற்குள்ளானது. (ச–4)

## பெற்றோல் குண்டு வீச்சில் தம்பதியர் பலி!

(பொலநறுவை)

பொலநறுவை கதிரவெளிப்பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை வீசப்பட்ட பெற்றோல் குண்டுத்தாக்குதலில் கணவனும் மனைவியும் பலியாகியுள்ளனர்.

வீட்டின் யன்னல் வழியாக மேற்கொள் ளப்பட்ட பெற்றோல் குண்டு, உறக்கத்தில் இருந்தவர்களின் மீது விழுந்துள்ளது. அதன்போது கணவன் மனைவி மற்றும் அவர்களது 4 வயதுக் குழந்தை மூவரும் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூர் சம்பவத்தைக் கண்டித்து வவுனியாவில் இன்று துக்கதினம்

(வவுனியா)

வவுனியாவில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது. யாழ்ப்பாணம் புத்தூர் மற்றும் வவுனியா தாண் டிக்குளம் பகுதிகளில் தமிழ்மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களைக் கண்டித்து இத் துக்கதினம் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக வவுனியா வெகு ஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இராணுவ அடக்குமுறையினைக் கொண்டு தமிழ்மக்கள் மீது தேவையற்ற பிரயோகங்களை இராணுவம் செய்துவருகிறது. இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இன்று துக்கநாள் கடைப் பிடிக்கவுள்ளதாக வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துக் கடைகளிலும் கறுப்புக் கொடிகள் கட்டி தமது அதிருப்தியினை தெரிவிப்போமென அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது சோககீதங்கள் இசைக்கப்பட்டு வீதிகள்தோறும் கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டன. (ச–4)

## ‘மக்கள் படை’ துண்டுப்பிரசுரம் தேர்தல் பிரசாரக் கூட்டம் ரத்து

### தேர்தலை பகிஷ்கரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம், எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரம் காரணமாக நேற்று இடைநிறுத்தப்பட்டது.

இப் பிரசாரக் கூட்டம் நடை பெறவிருந்த யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் மக்கள் படை என்ற பெயரில் எச்சரிக்கை ஒன்று நேற்று ஒட்டப்பட்டிருந்தது.

இதன் காரணமாகவே நேற்றைய கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது. துண்டுப்பிரசுரத்தில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம். எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமிழர் தாயகத்தில் இடமில்லை.

கடந்தகால அனுபவங்கள் எமக்குப்போதும். ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பான ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் உடன் நிறுத்துங்கள். இல்லையேல் விளைவு விபரீதமாகும், மக்கள் படை பதில் செல்லும் என அத் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தி.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவிருந்த இக்கூட்டத்தில் அக்கட்சியின் முக்கிய உறுப்பினர் நந்தன விக்கிரமசிங்க சிறப்புரையாற்றவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–19)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# இனவாதக்கட்சிகளை தமிழ் மக்கள் வெறுப்பதில் எள்ளளவும் தப்பில்லை

## அமைச்சர் டிலான் பெரேரா

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன வாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதனாலும் ஐக்கிய தேசியக்கட்சி தனது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்காகவும தமிழ் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதில் நியாயம இருக்கின்றது. என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலினை புறக்கணிக்கப் போவதாக வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வரும் செய்திகள் குறித்து, ஊடகம் ஒன்றுக்கு கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜுலை இனக்கலவரத்தில் தமிழ் மக்களுக்கு செய்த கொடுமைகளை மறந்து விடமுடியாது. யாழ்ப்பாணம் நூலகத்தைத் தீயிட்டுக் கொழுத்துவதில் அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அமைச்சரான காமினி திஸாநாயக்க முன் னின்று செயற்பட்டார்.ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் கண் மூடித்தனமாகத் தாக்கப்பட்டதையும் கொன்றொழிக்கப்பட்டதையும் மறந்து விட முடியாது.

தமிழ் மக்களை நசுக்கி ஒடுக்கும் இவ்வாறான பல கொடுமைகளைச் செய்து கொண்டே இன்று தமிழ் மக்களுக்கு நல்லது செய்யப்போவதாக பாசாங்கு காட்டி ரணில் தலைமையிலான ஐ.தே. கட்சி தமிழ் மக்களின் ஆதரவைத்திரட டிக்கொள்ள முயற்சிக்கினறது. இவாகள் இழைத்த அநீதிகனையும் இப்போது ஏமாற்ற நாடகமாடுவதையும் தமிழ் மக்கள் நம்பி ஏமாறமட்டார்கள்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த இன வாதக் கட்சிகளான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதால் தமிழ் மக்கள் அவருக்கு ஆதரவு வழங்கத்தயங்குகின்றனர் இந்த இரண்டு இனவாதக்கட்சிகளின் மீதும் தமிழ் மக்கள் சந்தேகமும் வெறுப்பும் கொண்டிருப்பதில் எள்ளளவும் தப்பில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## விபத்தில் காயம்

(சாவகச்சேரி)

யாழ். கச்சேரிக்கு அண்மையில் வீதியில் நாய்குறுக்கே ஓடியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தவர் கீழே விழுந்து காயங்களுக்கு உள்ளனார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இவ் விபத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த கே.வசந்தன்(வயது25)என்பவரே காயங் களுககு உள்ளானவராவார் காயமடைந்த இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். (ற-108)

★ ★ ★

(சாவகச்சேரி)

நாவற்குழி பாலத்தில் சென்று கொண்டிருந்த போது திடீரென்று பிறேக் போட்டதில் மோட்டர் சைக்கிள் சறுக்கி கீழேவிழுந்ததில் அதில் சென்ற இருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மிருசுவிலைச் சேர்ந்த த. தவச்செல்வம் (வயது 27) றொ. லக்ஸ்மன்(வயது21) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ற-108)

★ ★ ★

மழை நேரத்தில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் சறுக்கியதில் விபத்து ஏற்பட்டதில் பளையைச் சேர்ந்த கே. அனுஸ்ரன் என்பவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினார். (ற-108)

## கப்பல் கப்டன் நாடு திரும்பினார்

(கொழும்பு)

சோமாலியாவில் கடல் கொள்ளையாகளால் கடத்தப்பட்டு பணயக் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழரான செல்லத்துரை மகாலிங்கம் (வயது-58) கடந்த வெள்ளிக்கிழமை கொழுமபு திரும்பினார்.

101 நாட்கள் பணயக் கைதியாக இருந்த இவர் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமானத்தளத்தில் வந்திறங்கியதும் அவரது உறவினர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு வரவேற்றனர்.

சோமாலியா கடற்பிரதேசத்தில் ஆயுதம் தாங்கிய கடற்கொள்ளையர்களால் 101 நாட்கள் என்னுடன் கப்பலில் இருந்த, நானும் ஏனைய 8பேரும் கைதியாக்கப் பட்டிருந்தோம் பச்சை மாமிசத்தைத்தான் உணவாக உட்கொள்ள வற்புறுத்தினார். எம்மை அவர்கள் காயப்படுத்தாத போதும் உளவியல் ரீதியான சித்திர வதைகளுக்கு நாங்கள் உள்ளாக்கப்பட்டோம்.

எம்மை விடுவிக்க ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சும் மேற்கொண்ட முயற்சிக்கு நன்றி தெரிவக்கின்றோம் என அவர் விமான நிலையத்தை வந்தடைநததும் தெரிவித்தார். (த-4)

## அம்பாந்தோட்டையில் புதுவித நோய் அடுத்தடுத்து 3 சிறுவர்கள் உயிரிழப்பு

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டைப் பகுதியில் இனங் காணப்படாத நோயினால் மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இனந்தெரியாத நோயினால் பாதிக்கப் பட்ட மூன்று சிறுவர்களும் அம்பாந் தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்துள்ளனர்.

அந்நோயயைக்கண்டறிவதற்கான பரிசோதனைகள் துரிதமாக ஆரம்பிக் கபபடடுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய் வாய்ப்பட்ட சிறிது காலத்துக் குள்ளேயே மூன்று சிறுவர்களும் உயிரி ழந்துள்ளதாக் தெரிவிக்கப்படுகிறது. (த-8)



பண்ணைப் பாலம் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப் பட்டதையடுத்து, அதன் ஊடாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையில் ஈடுபடுவதைக் காணலாம்.

## ரணிலின் கூட்டத்திற்குச் சென்ற இரு தமிழ்ப் பெண்கள் கைது

(கொழும்பு)

பொல்காவலையில் கடந்த வெள்ளிக கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்திற்குச் சென்றிருந்த இரு தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொல்காவலைப் பிரதேச சபைக்கு அருகில் நடைபெற்ற இக் கூட்டத்திற்குச் சென்ற இந்த இரு பெண்களையும் பாதுகாப்புப் பிரிவினர் கைதுசெய்தனர்.

தாங்கள் இருவரும் வவுனியாவிலிருந்து வந்ததாக விசாரணைகளில் அப்பெண்கள் கூறியதாக அவ் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளும கூட்டங்களை உளவு பார்ப்பதற்காக இவ்வருவரும் வந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற-4)

## கொழும்பிலிருந்து அதிகாரிகள் வருகை

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து வருகை தந்த நகர அபவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் சாவகச்சேரி நகர்ப்புறத்தைக் கடந்த வெள்ளிக் கிழமை சுற்றிப்பார்வையிட்டனர்.

சாவகச்சேரி நகர அபிவிருத்தி திட்டமிடல் வரைபை மீள் பரிசீலனை செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்ட நகரதிட்டத் தின விபரங்கள் அடங்கிய வரைபடத்தை தயாரிப்பதற்கும் இடங்களை பார்வையிடுவதற்கும் தாங்கள் அங்கு வந்திருப் பதாக அவ் அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார். (து-108)

## ஓயாத அலைகள் - 3 வெற்றிவிழா நவ.2 இல்

(கிளிநொச்சி)

ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் 6ஆம் ஆண்டு வெற்றிவிழா எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதன் முன்னோடிக் கலந்துரையாடல்கள் முல்லை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. இதனை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேச கழகங்களுக்கிடையில் நடாத்தப் படவுளள உதைபந்து, கரபபந்து (ஆண், பெண்) கபடி(ஆண், பெண்) மென்பந்து வலைப்பந்து ஆகிய போட்டிகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன. (ற-4)

## மாணவர் கௌரவிப்பு

அகில இலங்கை 'சைவன்' நற்பணி மன்றத்தினால் யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரியில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவிக்கு துவிச்சக்கர வண்டி வழங்கலும், புலமைப்ப்ரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவனுக்கு பணப்பரிசு வழங்கலும், நூல்அறிமுகவிழாவும் இன்று பிற்பகல் 1 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியின் பிரடசாலை அதிபர் ப.குட்டித்தம்பி தலைமையில் நடை பெறவுள்ளது. (ச.9)

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

தற்போது லண்டனில் வசிக்கும் சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த மகாலிங்கம் சிவகுமார் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மருத்துவப்பொருட்கள் ,மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ மனைக்கு தேவையான அவசியமான பொருட்கள் என ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பொருட்களைக் கடந்த வாரம் டாகடர் அம்பிகைபாலனிடம் கையளித்துள்ளார். (து-108)

## பீடைகொல்லிகளுக்கு பீடைகள் இசைவாக்கம்

# உணவுப்பயிர்களில் நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாமைக்கு இதுவே காரணம்

## விவசாய ஆராய்ச்சி நிலையப்பொறுப்பதிகாரி விளக்கம்

(கோண்டாவில்)

வலிகாமம் பிரதேசங்களில் வெங்காயம, மிளகாய்,கத்தரி போன்ற உப உணவுப் பயிர்கள் தண்டு துளைப்பான், பனிப்பூச்சி ஆகிய பீடைத்தாக்கிகளினால் நீண்ட காலமாக பாதிக்கப்பட்டுவருகின்றன.

இது தொடர்பாக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப்பெறுப்பதிகாரி திருமதி. எஸ்.விஜயரத்தினம் விளக்கமளிககையில்,

பீடைகள்,பீடைகொல்லிகளுக்கு இசைவாக்கம் அடைந்துள்ளமையால் அவற்றை கட்டுப்படுத்த முடியவில்லை. பனிப்பூச்சிக்கு எதிரான செடி இனங்களை இனங்கண்டு பயிரிடல், செடிகளுக்கு பாதிப்புக்களை தராத பனிப்பூச்சிக்கு எதிரான இன்னுமொரு உயிரியை பயன் படுத்தல் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

விவசாயிகள் நோய்வாய்ப்பட்ட செடிகளை தனிப்படுத்துகை செய்வதனால் பாதுகாப்பான விவசாயத்தை மேற்கொள்ளலாம் இதுவும் கடினமானதே.

மாற்றுப்பயிர்ச்செய்கை மூலம் பீடைகளைக்கட்டுப்படுத்தலாம். அத்துடன் இயற்கை உரவகைப் பாவனையால் வீரியமான செடிகளை பயிரிடல், புதிய வளர்ச்சியை அதிகமாகக் காட்டும் பயறு,சணல், உழுந்து கௌபி போன்றவற்றை பயிரிடுவதனால் மண் வளத்தை சீராகப்பேண முடியும்.

மேலும் வீரியமான செடிகளை பயிரிடுவதன் மூலம் பீடைகளை கட்டுப்படுத்த முடியும் என குறிப்பிட்டார். (த-36)

# உ மாதங்களில் 300,000 பேருக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு

## – அமைச்சர் அதாவுடன செனவிரத்ன

(கொழும்பு)

வெளிநாடுகளில் மூன்று இலட்சம் இலங்கையர்களுக்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படும் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் வேலை புரிவோரின் பிள்ளைகளுக்கான பாடசாலைப் புத்தகங்களை சென் ஜோசப் கல்லூரியில் வழங்கி வைத்து உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னர் தொழிலமைச்சராக பதவி வகித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே முதன்முதலில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சேமநல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இந்த சேமநல திட்டத்தை அரசாங்கம் மேலும் விருத்திசெய்யவுள்ளதோடு நாடு திரும்பும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கு ஐந்து இலட்சம் பெறுமதியான தீர்வையற்ற பொருட்களை கொள்வனவு செய்ய வாய்ப்புகளும் வழங்கப்படவுள்ளன. அவர்கள் நாடு திரும்பிய ஆறுமாத காலப்பகுதிக்குள் பொருட்களை தீர்வையின்றி கொள்வனவு செய்துகொள்ள முடியும்.

புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்காக காப்புறுதித் திட்டம் ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. புலம் பெயர் தொழிலாளர்களுக்கு, ஓய்வூதியத்தை வழங்க பாராளுமன்றத்தில் யோசனை ஒன்றை நான் சமர்ப்பித்துள்ளேன் எனவும் அமைச்சர் அதாவுட செனவிரத்ன அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார். (ந-19)

# யுத்தம் மூலம் சாதிக்க முடியாததை யுத்தநிறுத்தம் மூலம் புலிகள் சாதிப்பு

## –சட்டத்தரணி அசோக சேரசிங்க

(கொழும்பு)

இலங்கையை அமெரிக்காவின் குடியேற்ற நாடாக மாற்றுவதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் மக்கள் நிகழ்சித்திட்டத்தினது முக்கிய நோக்கம் என்று சட்டத்தரணி அசோக சேரசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அசோக சேரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் நிகழ்ச்சிகள் மாத்திரமே தெரிவிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் யுத்தத்தின் மூலம் வென்றெடுக்க முடியாத பல விடயங்களை யுத்த நிறுத்தத்தின் மூலம் சாதித்துள்ளனர் எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ந-19)

### உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள்

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சிவார இறுதி நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதி வர்த்தினி கலாமண்டபத்தில் நகராட்சி மன்றச் செயலாளர் திருமதி க.திருச்செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்புவிருந்தினர்களாக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஹரி சத்தியசீலன், தும்பளை சிவப்பிரகாச வித்தியால அதிபர் கணபதிப்பிள்ளை, முன்பள்ளி இணைப்பாளர் திருமதி கி.இரவீந்திரன், பொதுச் சுகாதார பரிசோதகர் க.அருந்தவராசா, சிவன்கோவில் முகாமையாளர் சிறாதராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-104)

### பிரயாணிகள் சிரமம்

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலைய 786, 732,789 இலக்கங்களுடைய பேருந்துகள் தரிக்குமிடத்தில் அமைக்கப்பட்ட தகர கொட்டகை கூரையினால் மழை காலங்களில் தண்ணீர் ஒழுகி பயணிகள் நிற்கமுடியாத நிலையில் அவஸ்தைபடுகின்றனர். வயோதிபர்கள், நோயாளிகள் நீண்ட நேரமாக பேருந்து வரும்வரை காத்திருக்க வேண்டியிருப்பதால் சில ஆசனங்களை அமைக்கும் படியாகவும் கூடிய சீக்கிரம் கொட்டகையையும் சீரமைத்துப் பயணிகளுக்கு வசதி செய்து தருமாறும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-39)

### கதிரைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு 25 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சேர்ச் வீதியை சேர்ந்த நாகசுந்தரம் என்பவரே 25 பிளாஸ்ரிக் கதிரைகளை டாக்டர் எஸ்.பாலகுமாரனிடம் அண்மையில் கையளித்துள்ளார். (ந-108)

## இராசிபலன்

31.10.2005
(ஐப்பசி 14, திங்கட்கிழமை)
திரயோதசி காலை 6.24 மணி வரை
அத்தம் பிற்பகல்- 1.43 மணி வரை
இராகுகாலம்-7.33-9.03 மணிவரை
சுபநேரம்-12.03-1.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், பகைவர் நேசம், போசன நன்மை. |
| இடபம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு. |
| மிதுனம் | தன்னம்பிக்கைக் குறைவு, ரோகநிலை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| கடகம் | மனோ தைரியம், மாதர் நட்பு, எடுத்த காரியம் கைகூடும், புதிய பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, பொருள் விரயம், திடீர் நன்மை, மனஸ்தாபம். |
| கன்னி | வெகுமானம், சயனசுகம், மாதர்நட்பு, புதிய சிந்தை. |
| துலாம் | உஷ்ண வியாதி, சிந்தனை மிகுதி, சுப செலவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | சயனசுகம், ஆனந்தம், எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| தனுசு | ஆரோக்கியம், பிறர் உதவி, இஷ்டசித்தி, அதிகாரிகள் சந்திப்பு. |
| மகரம் | பொருள்விரயம், சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, அதிக செலவு. |
| கும்பம் | முழங்கால் வலி, பொருள் விரயம், காரிய தாமதம், போசனசுகம். |
| மீனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, விருந்துபசாரம், சயனசுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# எண்ணெய் அகழ்வுக்கான கேள்வி டிச.இல் கோரப்படும்

(கொழும்பு)

இலங்கை கடற்பிரதேசத்தில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கான கேள்வி மனு எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் கோரப்படவிருப்பதாக கனியவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கேள்வி மனு கோருவதற்கான சட்டத்திருத்தங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார்.

எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவிருப்பதாகதெரிவித்த அமைச்சின் செயலாளர் மன்னாரிலிருந்து கொழும்பு வரையிலான பதினொரு இடங்களில் இந்த அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக சுமார் 400 மில்லியன் ரூபா செலவாகுமென்றும், முதற்கட்டமாக 11 எண்ணெய்க் கிணறுகள் அமைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)

# மின்தடை பற்றிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மின்சார இணைப்புக்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் அடுத்துவரும் சில நாட்களில் மின்சாரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய அலுவலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை இணுவில், உடுவில், மருதனாமடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாண நகரம், ஆணைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பல்கலைக்கழக மருத்துவபீடப் பிரதேசம், பொற்பதி, சங்குவேலி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும்,

19ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய், கோண்டாவில் படுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைபகுதியிலும், 26ஆம் திகதி சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலையப் பகுதி மற்றும் வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

டிசம்பர் மாதம் 3ஆம் திகதி சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-35)

# பொலிஸார் சிபார்சு செய்யும் இடங்களில் பிரசாரக் கூட்டங்கள்

## பாதுகாப்பு கருதி விசேட நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸாரினால் சிபார்சு செய்யப்படும் இடங்களில் மாத்திரமே தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் வேட்பாளர்களினதும் கட்சித் தலைவர்களினதும் பாதுகாப்பு கருதி பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பிரதம வேட்பாளர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், சில கட்சிகளும், வேட்பாளர்களும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது செயற்படுகின்றனர். இதனால் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தாம் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது முக்கியமானதெனச் சுட்டிக்காட்டிய பொலிஸ் தேர்தல் செயலகம் இதற்காக ஒத்துழைப்பை வழங்குமாறு அனைத்துக் கட்சிகளையும் கேட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (ந-7)

# உடுவே தம்மாலோக தேரரின் எம்.பி.பதவியை பறிக்க முயற்சி

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணக்கப்பாட்டிற்கு மாறாக ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிக்க எடுத்த முடிவின் காரணமாக உடுவே தம்மாலோக தேரரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை பரிசிலனை செய்யும் முகமாக எதிர்வரும் வாரம் கட்சியின் மத்திய செயற்குழு கூடி ஆராயவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் போட்டியிட்டு கட்சியின் ஆதரவாளர்களின் வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்ற உடுவே தம்மாலோக தேரர் தற்போது கட்சியின் கொள்கையை மீறி செயற்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பேச்சாளர் நிஷாந்த வர்ணசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

காலஞ்சென்ற கங்கொடவில சோமதேரரின் வழியைப் பின்பற்றுவதாக உறுதிபூண்ட உடுவே தம்மாலோக தேரர்.

அவரின் கொள்கைகளைக் குழிதோண்டி புதைத்து விட்டு தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அளித்துள்ளதன் மூலம் சோம தேரரின் மறைவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகவே சந்தேகிக்க நேர்ந்துள்ளது. எனக் குறிப்பிட்டுள்ளார். (ந)

வாசிப்பு மாதம்

காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுணில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.

(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)

தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.

தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@viluthu.org

வாசியுங்கள் அகவிழி திறக்கும்

வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

அகவிழி

ஆசிரியத்துவநோக்கு...

C-அ-1755

## இன்று ஒரு தகவல்

# தேச பக்தி

ஒரு நண்பர் வந்தார். அவருக்குத் தேச பக்தி மிக அதிகம். தெய்வபக்தியை விட தேசபக்திதான் முக்கியம் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்.சொல்வது போலவே நடக்கவும் செய்வார். உண்மையாகவே தேச பக்தியோடு இருப்பவர்களும் உண்டு... தேச பக்தி இருப்ப தாகக் காட்டிக்கொள்பவர்களும் உண்டு என்று நான் ஒருநாள் சொன்னேன் அவரிடம். அவர் உடனே எனக்கு ஒருகதை சொன்னார் போலந்து தேசத்துக் குட்டிக்கதை.

ஒரு ஊரில் பெரிய மனிதர் ஒருவர் இருந்தாராம். மிகவும் வசதியான ஆள். இருந்தாலும் அவருக்கு ஒரு தொந்தரவு வேறு ஒன்றுமில்லை. பல்வலி ஒரேயொரு பல் சொத்தை மிகவும் கஷ்டமாக இருந்தது. "என்ன செய்வது என்று யோசித்தார். உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டார். ஓடிப்போய் பல் வைத்தியரை அழைத்துக்கொண்டுவா" என்றார். அவன் உடனே ஓடிப்போய் அழைத்துக் கொண்டு வந்தான்..

பல் வைத்தியரும் வந்துசேர்ந்தார். யாரிடமும் பல்லைக் காட்டாத இவர் பல்லைக் காட்டினார். வைத்தியரிடம் காட்டித்தானே ஆகவேண்டும். அவர் அதைச் சோதித்துப் பார்த்துவிட்டு "இதை பிடுங்கிவிடுவது தான் நல்லது" என்றார். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரஷ்யா நாட்டுத்தளபதி ஒருவர் இவரைத் தேடிக் கொண்டு வருவதைப் பார்த்தார். உடனே ஒரு ஐடியா செய்தார். அந்த பல் வைத்தியரைப் பார்த்து "வைத்தியரே நீங்கள் கொஞ்சநேரம் அடுத்த அறையில் போய் இருந்து கொள் ளுங்கள். நான் கூப்பிடும் போது வரலாம். எடுக்க வேண்டிய பல் இதுதான். பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார். அவரும் சரி என்று கூறிவிட்டு அடுத்த அறையில் போய் உட்கார்ந்து கொண்டார்.

அந்த தளபதி உள்ளே வந்தார். அவரைக் கூப்பிட்டு உட்காரவைத்து பேசிக்கொண்டிருந்தார் இவர். அப்போது இவர் சொன்னார். "நீங்கள் உங்கள் நாட்டில் எல்லாம்... எல்லோரும் தேச பக்தி இருப்பதாகக் காட்டிக் கொள்கிறீர்கள் ஆனால் உங்களைவிட எங்களுக்கு தேச பக்தி அதிகம். அதை இப்போதுகூட என்னால் நிரூபிக்க முடியும்" என்றார். "எப்படி நிரூபிப்பீர்கள்?"என்று கேட்டார் அந்தத் தளபதி.

இதோபாருங்கள்! எங்கள் தேச பக்தியை காட்டுவதற்கு நாங்கள் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்ய தயா ராக இருக்கிறோம்.உங்களால் செய்யமுடியாததை கூட நான் செய்து காட்டுவேன் என்றார் இவர். "அடடே! அப்படியா! எங்கே செய்து காட்டுங்கள் பார்க்கலாம்?" என்றார் அந்த தளபதி. உடனே அவர் அந்த பல் வைத்தியரை அழைத்து வரச் சென்னார். பக்கத்து அறையில் இருந்து அவர் வந்து சேர்ந்தார். "இதோ பாருங்கள்... இப்போது எனது தேச பக்தியைக் காட்ட விரும்புகிறேன் அதற்காக எனது பற்களில் ஒன்றை தியாகம் செய்ய விரும்புகிறேன் அதனால் எனது பற்களில் ஒன்றைப் பிடுங்கி எடுத்துவிடுங்கள்" என்றார்.

பல் வைத்தியர் புரிந்துகொண்டார். சரியாக அந்த சொத்தை பல்லை பிடுங்கி எடுத்துவிட்டார். இதைப் பார்த்த வுடன் அந்தத் தளபதிக்கு ரோசம் வந்துவிட்டது. நிமிர்ந்து பார்த்தார் "இதோ பாருங்கள் நானும் தேச பக்தியில் உங்கள்ள விட குறைந்தவன் இல்லை. வைத்தியரே அவர் ஒரு பல்லைத்தான் தியாகம் செய்தார். நான் என் நாட்டுக்காக இரண்டு பற்களை தியாகம் செய்கிறேன் என்னிடம் இருந்து இரண்டு பல்லை பிடுங்கி எடுங்கள்" என்றார். வைத்தியர் பார்த்தார். அவருக்கு என்ன... அவருக்கா வலிக்கப்போகிறது. இருப்பதிலேயே நல்ல பல்லாகப் பார்த்து இரண்டை பிடுங்கிப்போட்டார் "பார்த்தீர் களா என்னுடைய தேச பக்தி?" என்று சொல்லிக் கொண்டே பொக்கைப் பல்லுடன் எழுந்து அந்த தளபதி புறப்பட்டுப் போய்விட்டார்.

இதுதான் அந்த நண்பர் சொன்ன குட்டிக்கதை. யோசித் துப் பாருங்கள் தேச பக்தியை இப்படியாக காட்டிக் கொள்வது விளம்பரத்துக்காக காட்டப்படும் தேச பக்தி இப்படித்தான். வீணாகிப்போகும். உண்மையான தேச பக்தி இருந்தால்தான் சுதந்திரத்தின் அருமையை உணர முடியும்.வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பது போல ஜனநாயகத்தின் அருமை சர்வாதிகாரத்தில் தான் தெரியும்.

சர்வாதிகார் நாட்டில் இருந்த ஒருவருக்கு பல் வலி வந்து விட்டதாம். உடனே அவர் அங்கே இருந்து புறப்பட்டு ஒரு ஜனநாயக நாட்டுக்கு வந்து ஒரு பல் வைத்தியரைப் பார்த்து "எனக்கு வைத்தியம் செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டாராம். "உங்கள் நாட்டில் பல் வைத்தியர் யாரும் இல்லையா? இதற்காக அங்கிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்களே?" என்று கேட்டிருக்கிறார் வைத்தியர். "எங்கள் நாட்டில் பல் வைத்தியர்கள் இருக்கிறார்கள் ஆனாலும் அங்கே நாங்கள் எங்கள் வாயைத் திறப்பதற்கு அனுமதியில்லை! அதனால்த்தான் இங்கே வந்தேன்" என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ்மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது

## புத்தூர் சம்பவத்தை கண்டித்து கல்விச் சமூகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் இடம்பெற்ற அப்பாவி பொதுமக் கள் மீதான இராணுவத்தினரின் மிலேச்சத்த னமான தாக்குதல் சம்பவத்தை யாழ் பல்கலைக் கழக மாணவ ஒன்றியம் மற்றும் இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் என்பன வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பில் அவை விடுத்துள்ள கண்டன அறிக்கைகளின் விபரம் வருமாறு!

### *யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்*

யாழப்பாணம் புத்தூர் பகுதியில் இராணுவத் தின் அத்துமீறல் சம்பவங்களைக் கண்டித்து அகிம் சைவழியில் எதிர்ப்பு-போராட்டம் நடாத்திய மக்கள் மீது மிலேச்சத்தனமான இராணுவத்தி னரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் அப்பாவி இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் வயோதிபர்கள் உட்பட சுமார் 10ற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தை பல்கலைக்கழக மாணவர்களா கிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களின் வாழ்விடங்களை அத்துமீறி அபகரித் தமை மட்டுமன்றி அன்றாட வாழ்வாதார முறை மைகளுக்கும் இடையூறாக இருப்பதுடன் அப்பாவி பொதுமக்களையும் கொன்றொழிக்கும நோக்கத்து டனேயே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இத்தாக்குதல் சம்பவங்கள் ஒரு யுத்த நிறுத்த மீறலாகும் எனினும் போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினர் மௌனித்திருப்பது எமக்கு ஆழ்ந்த வேதனையையும் கவலையையும் அழிக்கின்றது.

இராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி இளைஞனுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவ தோடு அவர்களின் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### *இலங்கை உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம்*

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற்ற இராணுவத்தின் அடா வடித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் தாயும் இளம் யுவதிகள் மூவரும் இருந்த வீட்டினுள் புகுந்த இராணுவச்சிப்பாய்கள் சிலர் அங்கிருந்த இளம் யுவதி மீது தாகாத முறையில் நடந்துகொண் டுள்ளனர்.

அதேவேளை, வீட்டில் இருந்த பெண்கள் எழுப் பிய அபலக்குரலை அடுத்து அருகில் உள்ளவர் கள் அப்பகுதியில் திரண்டனர் அவ்வேளை பாலி யல் பலாத்காரம் புரிய முனைந்த இராணுவத்தினர் அருகாமையில் உள்ள இராணுவ முகாமிற்கு சென் றதை அப்பகுதி மக்கள் அவதானித்தனர்.

இதையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட வர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற கோரிக் கையை முன் வைத்து அப்பகுதி மக்கள் இராணு வத்தினருக்கு எதிரான எமது எதிர்ப்பினை அமைதி யான முறையில் வெளிப்படுத்திய போது இராணு வத்தினரும் பொலிஸாரும் பொதுமக்கள் மீது தாக்கு தல் நடத்தியதோடு துப்பாக்கி பிரயோகமும் மேற் கொண்டனர்.இச்சம்பவத்தில் ஒருவர் மரணமானது டன் வயோதிபர் பலர் காயடைந்தனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பிர சன்னமாகியிருந்த சமயத்திலேயே அப்பாவி பெண் களும் வயோதிபர்களும் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களை பாதுகாக்கின் றோம் என்று கூறிக்கொள்பவர்களை பொதுமக் களை தாக்கி கொன்றொழிக்க முற்பட்டுள்ளார்கள்.

தமிழர்களுக்கு எவ்வித நீதியும் நியாயமும் கிடைக் கப்போவதில்லை நாங்கள் எங்களுக்கான பாது காப்பையும், நீதி நியாயத்தையும் எங்கள் கைகளில் எடுக்கவேண்டும் என்பதை யாரும் தடுக்க முடியாது என்பதை இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக்காட்டு கின்றன.

தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண் டிய காலம் நெருங்கிவிட்டது. எம் இனத்தை நேருக்கு நேர் நின்று வெற்றிகொள்ள முடியாத கயவர்கள் இவ்வாறான சமுதாயத்தை சீரழித்து இனத்தின் அடையாளத்தை அகற்றுவதற்கு மிக முனைப்புப் பெற்று செயற்படத் தொடங்கிவிட்டார்கள் என்பதை இச்சம்பவம் மிக துலாம்பரமாக காட்டிநிற்கின்றது.

ஆண் துணையற்ற வீட்டில் நுழைந்து பாலியல் பலாதகாரம் புரிய முனைந்த சம்பவமானதும்,அதனை அமைதியான முறையில் தட்டிக்கேட்க முனைந்த வர்களை கொல்ல முனைந்த செயற்பாடும், தமி ழர்கள் மீது இவ்வாறான கொடூரங்களை அரங்கேற் றினால் தமிழ் மக்கள் கேட்பார்கள் யாரும் இல்லாத அநாதரவானவர்கள் என்று அரசு நினைப்பதேயே எடுத்துக்காட்டுகிறது.

எம் இனிய உறவுகளே இந்த நிலை நாளை உங்கள் வாசலை தட்டுவதற்கு நேரம் எடுக்காது இவ்வாறான அவல நிலையில் இருந்து நாம் முழுமையாக விடுபட வேண்டுமானல் நாம் எல்லோரும் ஓரணியாய் அணி திரண்டு எமது எதிர்ப்பை தெரிவித்து எதிரிக்கு எமது பலத்தை புரிய வைக்கவேண்டும்.இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற்றால் ஒட்டு மொத்த மாணவர் சமுதாயம் போராட்டங்களில் ஈடு பட்டு அரச இயந்திரங்களை முற்றாக முடக்க வேண்டி வரும் என்று எச்சக்கின்றோம் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

## விரக்தியின் விளிம்பில் தமிழினம்

# தமிழரின் எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்குமா சிங்கள இனம்?

## -மா.க.ஈழவேந்தன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் சிங்களப் படையின் தாக்குதல் எமக் குப் புதிய செய்தியல்ல. இது தமிழினத்தை பூண்டோடு அழிக்கும் சதி முயற்சியின் தொடர்ச் சியாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக் கையில்,

வவுனியாவில் நடைபெற்ற தமிழீழ எழுச்சிப் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்த்தேசிய நாடா ளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய நாம் ஓமந்தை யில் வியாழக்கிழமை பிற்பகலில் தேசியத் தலை வரின் உருவப்படத்துடனும் விடுதலைப் புலிகளின் கொடியுடனும் மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்த வல்வெட்டித்துறை இளைஞர்களை மாநாட்டில் கலந்துகொள்ளவிடாது தடுக்கின்ற முறையில் ஓமந்தையில் உள்ள சிங்கள இராணுவம் வெறியாட்டம் ஆடியதால் இளைஞர்கள் சார்பில் இராணுவத் துடன் மோதவேண்டிய சூழ்நிலை எழக்கு ஏற்பட்ட தனால் வெள்ளிக்கிழமை மாலை தான் நாம் யாழ்.நகர் திரும்ப முடிந்தது.

இதனால் புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் சிங்கள இராணுவம் வெறியாட்டம்ஆடி துப்பாக்கி கொண்டு சுட்டதனால் 10ற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகாயமுற்று யாழ்ப்பாண மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மறுநாள் நானும் சிவநேசன், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிறேமச் சந்திரன் ஆகியோர் காயமுற்றோரைப் பார்த்து தேறுதல் கூறத்தக்கதாய் இருந்தது. இவ் வெறித் தாக்குதலில் பாடுகாயமடைந்த 22 வயது இளைஞன் தர்மராஜா நிரோஜன் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு உயிர் துறந்த நிகழ்ச்சியையும் எண்ணிப்பார்த்து இரத்தக் கண்ணீர் விடுகிறோம். இராணுவத்தின் தாக்குதல் நடைபெற்ற வேளை யில் கண்காணிப்புக்குழு அங்கு நின்றபோதும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை மேற் குறித்த சிங்கள வெறித்தாக்குதலுக்கு சிங்கள இராணுவத்தின் முறைகெட்ட செயற்பாடே காரணம்.

யாழ். மருத்துவமனையில் காயமுற்றோருடன் நாம் சந்தித்துப் பேசியபோது தங்கள் வீடுகள் பெரும்பாலனவை சிங்கள இராணுவ முகாம்களுக்கு முன்பாக அமைந்திருப்பதனால் தாம் மீண்டும் புத்தூர் சென்று வாழ முடியாது என்று கதிகலங்கிய நிலையில் எமக்குக் கூறினர்.

நாம் வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்து முகாம் களில் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் எம்மிடம் கூறியபோது எம்மை மீறி கண்கள் கலங்கின.

கடந்த ஒக்டோபர் 12ஆம் திகதி நல்லூர் கோயில் வீதியில் உள்ள கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் யாழ்ப்பாணப் படைத்தளபதி சுனில் தென்னக்கோ னுடன் நாம் நீண்டநேரம் உரையாடிய போது, ஈழத் தமிழ்மக்கள் தன்மானத்தோடும் உண்மையான அமைதியோடும் வாழவேண்டும்.இங்கு பலோத்கார மாகக் குடியேறித் தாக்குதல் நடாத்துகின்ற சிங்களப் படை உடனடியாக வெளியேற வேண்டும் என்று கூறினோம். இதற்கு அவர் பதில் தரவில்லை ஆனால் புன்முறுவல் பூத்தார்.

இந் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்ற நாம் சிங்கள இராணுவம் இம் மண்ணில் இருந்து வெளி யேறும் வரை இந்நாட்டில் தமிழனுக்கு நிலையான பாதுகாப்பும்,அமைதியும் ஏற்படப்போவதில்லை என்று தமிழ்ச்செல்வன் கூறிய கருத்தையும் இங்கு நினைவுகொள்ள விரும்புகிறோம்

விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்படும் தமிழ் மக்கள் அடுத்து என்ன செய்யப்போகிறார்கள் என் பதற்கு நாம் விளக்கம் கூறுவது கடினம் நாம் விரும்பி னாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி இந்நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படப்போவது உறுதி. தமிழனுக்கு எதையும் தாங்கும் இதயமுண்டு. ஆனால் சிங்கள இனம் எம் எதிர்த் தாக்குதலுக்கு ஈடு கொடுக்குமா என்பது பெருங்கேள்வியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

# கராம்பின் மருத்துவ குணங்கள்

சுவைக்காகப் பயன்படுத்தப்படும் கராம்பு பலவித அபூர்வ மருத்துவ குணங்களைக் கொண்டது.



கராம்பில் கார்போஹைட்ரேட், ஈரப்பதம், புரதம், வாலடைல் எண்ணெய், கொழுப்பு, நார்ப்பொருள், மினரல், ஹைட்ரோகுளோரிக் அமிலச் சாம்பல்கள், கல்சியம், பொஸ்பரஸ், தயமின், ரிபோ பிளேவின், நயாசின், விற்றமின் சி மற்றும் 'ஏ' போன்றவை உள்ளன. கராம்பின் மொட்டு, இலை, தண்டு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது.

* கராம்பில் பலவித மருத்துவ குணங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் ஊக்குவித்தல், தூண்டுதல் உண்டாக்கும் பொருளாக உள்ளன. பல் வலிகளைப் போக்குவதுடன் வயிற்றுப் பொருமல், குதவழிக் காற்றோட்டம் போன்றவற்றுக்கும் மிகச் சிறந்த நிவாரணி.

* உடலைப் பருமனடையச் செய்யவும், வளர்ச்சிதை மாற்றப் பணிகளுக்கு உதவவும், சூட்டை சமப்படுத்தவும், இரத்த ஓட்டத்தை முறைப்படுத்தவும் இது பலன் அளிக்கிறது.

* ஜீரண உறுப்புகளில் சுரக்கும் நொதியங்களை கராம்பு ஊக்குவிக்கிறது. இதனால் ஜீரணக் கோளாறுகள் நீங்குகின்றன.

* கராம்புப் பொடியை வறுத்து அரை ஒரு கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். கராம்பில் உள்ள விறைக்கப் பண்ணும் ஒரு பொருள் வயிற்றிலுள்ள சில உறுப்புகளை விறைப்படையச் செய்து வாந்தியைத் தடுக்கிறது.

* நான்கு கிராம் கராம்பை மூன்று லீற்றர் தண்ணீரில் போட்டு அரைப்பங்காக சுண்டும் அளவிற்கு கொதிக்கவைத்துப் பருகினால் கொலரா குணமடையும.

* சிறிது சமையல் உப்புடன் கராம்பை சப்பிச் சாப்பிட்டால் தொண்டை எரிச்சல், கரகரப்பு நீங்கி தொண்டை சரியாகும். தொண்டை அடைப்பால் ஏற்படும எரிச்சலைத் தவிர்க்க சுட்ட கராம்பு மிகச் சிறந்தது.

* கராம்பு எண்ணெய் மூன்று துளியுடன் தேன் மற்றும் வெள்ளைப் பூண்டுச் சாறு சேர்த்து படுக்கைக்குப் போகும் முன்பு சாப்பிட ஆஸ்து மாவால் ஏற்படும் சுவாசக் குழல் அழற்சி சரியாகும்.

* முப்பது மில்லிலீற்றர் நீரில் ஆறு கராம்புகளைப் போட்டு கொதிக்கவைத்து அந்தக் கசாயத்தில் தேன் கலந்து குடித்தால் ஆஸ்துமா கட்டுப்படும்.

* கராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர வாய்நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவிவர குணம் கிடைக்கும்.

* 3-5 துளி நல்லெண்ணெயில் ஒரு கராம்பை சூடு காட்டி அந்த எண்ணெயை வலியுள்ள காதில் இட்டால் சுகம் கிடைக்கும்.

* தசைப்பிடிப்புள்ள இடத்தில் கராம்பு எண்ணெயைத் தடவி வர குணம் கிடைக்கும்.

* கராம்பு மற்றும் உப்பை பசும்பாலில் அரைத்து அந்தப் பசையைத் தடவினால் தலைவலி பறந்துவிடும்.

தலையிலுள்ள நீரை உப்பு உறிஞ்சி எடுப்பதால் தலைப் பாரம் குறைந்து குணம் கிடைக்கிறது.

* கண் இமைகளில் ஏற்படக்கூடிய அழற்சிகளை போக்க கராம்பை நீரில் உரசி அந்த நீரைப் பயன்படுத்தினால் குணம் கிடைக்கும்.



* சமையலுக்கும், கறிகளுக்குச் சுவையூட்டவும், கறி மசாலா வகைகள் தயாரிக்கவும் கராம்பு முக்கியத்துவம் பெறுகிறது. வாசனைத் தயாரிப்பு, சோப்புத் தயாரிப்பிலும் இது பயன்படுத்தப்படுகிறது. (ற)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வரும் வாக்காளர்களைக் கணக்கெடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்கு வரும் அனைத்து வாக்காளர்களையும் கணக்கெடுக்க தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பிலான பணிகளுக்கு கிராம சேவையாளர்கள் தெரிவத்தாட்சி அலுவலகர்கள் மாற்றும் பொலிஸாரை ஈடுபடுத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கும் சுதந்திரமான, நேர்மையான தேர்தலை நடத்துவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அக்கூட்டத்தில் உறுதியளித்துள்ளார்.

அனைத்து கொத்தணி வாக்களிப்பு நிலையங்களிலும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களையும் பவ்ரல் அமைப்பின் கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

வாக்களிக்க வருபவர்களின் தொகையைக் கணக்கிடுவதன் மூலம் வாக்களித்தவர்களின் எண்ணிக்கைபற்றி அறிந்து கொள்ள முடியுமென்றும் அதனால் மேலதிக வாக்களிப்புகள் இடம்பெறாதென்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சிறீபதி சூரியராச்சி, கே.என்.வேரகொட, சிறிதுங்க ஜயசூரிய, சமல் ஜயனெத்தி உட்பட பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ற-4)

# இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் மஹிந்தவுக்கு ஆதரவாக பிரசாரம்

## ஜனாதிபதியிடம் முறையிட ஐ.தே.க முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டுவதாக இராணுவத்திற்குள்ளும் பொலிஸ்க்குள்ளும் பிரசாரம் மேற்கொள்ளும் மூவர் குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்ய ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

மஹிந்தவுக்கு ஆதரவான இரு மேஜர் ஜெனரல்கள் மற்றும் ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் செயற்பாடுகள் குறித்து முழுமையான அறிக்கையொன்றினைக் கையளிக்க முடிவு செய்துள்ளதாக அக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள் தேர்தல் சமயத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறைகளை மீறியுள்ளதுடன் தேர்தல் சட்டவிதிகளையும் மீறி இந்த மூன்று அதிகாரிகளும் நடந்து கொள்வதாகவும ஐ.தே.கட்சி அவ் அறிக்கையில் தெரிவிக்கவுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் இராணுவத்திற்குள்ளும் வட கிழக்கிலிருக்கும் பொலிஸாருக்குள்ளும் செயற்படுத்தப்படவிருந்த திட்டங்கள், அதற்கெனப் பயன்படுத்தப்படவிருந்த இராணுவ ட்ரக் வண்டிகள், ஜீப் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்களையும் அவ் அறிக்கையில் விபரமாகக் குறிப்பிட உள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே தேர்தல் விதிகளை மீறும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் தேர்தல் சட்டத்தை மீறுவாராயின் அதுகுறித்து தேசிய ஆணைக்குழுவின் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவிற்கு தொலைபேசியினூடாக அறிவிப்பதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் முறைப்பாடுகள் கிடைத்ததும் அவற்றை விசாரணை செய்து உரிய அதிகாரிகளுக் குத் தேவையான உத்தரவுகளை உடனடியாக வழங்கி தவறுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ற-7)

# யாழ்.விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'டிசிரி' 'அனோவா' இன விதை உருளைக் கிழங்குகள் யாழ்.மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

விதை உருளைக்கிழங்குகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள் 50கிலோ கொண்ட விதை உருளைக்கிழங்கு பெட்டி ஒன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபா வீதம் முற்பணத்தை கமநல சேவை நிலையத்தில் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு நவம்பர் மாதம் முதல்வாரத்தில் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்கப்படும் என யாழ். பிராந்திய கமநல சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-35)

# எரிபொருட்களின் விலை அதிகரிப்புக்கு திறைசேரி அனுமதியளிக்கவில்லை

## -பெ.கூ.தா.பிரதிப் பொது முகாமையாளர்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை அதிகரிப்பதற்கு திறைசேரி அனுமதியளிக்கவில்லை என பெற்றோலிய கூட்டுத்தாபன பிரதிப் பொது முகாமையாளர் சிறில் கிரிபல்ல தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊடகங்களில் எண்ணெய் விலை அதிகரிக்கப்படும் என செய்திகள் வெளிவந்துள்ள போதும் அத்தகைய அதிகரிப்புக்கள் எதுவும் இடம்பெறமாட்டாது என கிரிபல்ல தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை அதிகரிப்புக் காரணமாக பாவனையாளர்கள் மீது பளுவைச் சுமத்துவதில்லை என்று இந்திய எண்ணெய் கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை 2009ஆம் ஆண்டு வரை அமுலில் இருக்கும்.

பாவனையாளர்களுக்குச் சலுகைகளை வழங்கத் தற்போது திறைசேரி நிதிவழங்குவதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நஷ்டம் ஏற்படப்போவதில்லை எனவும் கிரிபல்ல மேலும் தெரிவித்துள்ளார். (ற-19)

# அமைச்சின் செயலாளர் நியமனம் குறித்து புலிகளுடன் அரசு ஆலோசனை?

வடக்கு-கிழக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சு செயலர் நியமனம தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் ஆலோசனை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கடந்த 2 மாதங்களுக்கு முன்பாக வவுனியாவில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இது தொடர்பில் ஆலோசனை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒப்புதலையடுத்து கடந்த வியாழக்கிழமை விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சின் செயலராக அக்கரைப்பற்றைச் சோந்த ஏ.எச்.எம்.மகரூப் (வயது-53) நியமிக்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. தமிழீழ நிர்வாகத்தின் ஆலோசனைக்கமையவே இந் நியமனம் அறிவிக்கப்பட்டதாகவும் ஆளுநர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளாா.

17ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களின் செயலர்களில் முஸ்லிம் ஒருவர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## மரியாதை

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அவன் மானைப் பின்தொடர்ந்து வெகுதூரம் சென்றுவிட்டதால் அவன் திரும்பிவர வழிதெரியாமல் தவித்தான்.

அப்பொழுது அவ்வழியில் ஒரு கிழவி விறகு சுமந்து சென்று கொண்டிருந்தாள். மன்னர் அக்கிழவியைப் பார்தது,

"ஏய் கிழவி இந்த வழி எங்கு செல்கிறது?" என்று கேட்டான். அதற்குக் கிழவி மன்னன் என்றுகூடப் பாராமல், "ஏய் மடையா, உனக்கு இதுகூடத் தெரியாதா? இவ்வழி எங்கும் போகாது. இது இங்கேதான் இருக்கும். நீ எங்கே போகவேண்டும்?" என்று கேட்டாள்.



கிழவியின் பதிலைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். அவன் கிழவியிடம்,

"இங்கு எங்கேயாவது உணவு கிடைக்குமா?" என்று கேட்டான். கிழவி புன்னகை புரிந்து,

"காட்டில் எப்படி உணவு கிடைக்கும். யாருடைய வீடடிற்காவது போ உணவு கிடைக்கும்" என்றாள்.


கிழவியினுடைய பேச்சின திறமைக்கு முன்னாள் மன்னனின் ஆணவம் குறைந்தது. அவன் மிகுந்த பணிவுடன் கிழவியைப் பார்த்து,

"தாயே! நான் இந்த நாட்டின் மன்னன். என்னுடைய ஆடை அணிகலன்களைக் கண்டு என்னை அறிந்தும்கூட நீங்கள் என்னை ஏன் மடையா எனக் கூறினீர்கள்" என்று கேட்டான்.

அப்பொழுது கிழவி இனிமையான குரலில் கூறினாள். "மன்னரே மரியாதை கொடுப்பவர்கள்தான் மரியாதை பெறுவார்கள். நான் வயதில் உங்களைவிடப் பெரியவள். ஆனாலும் நீங்கள் ஆணவத்தினால் "ஏய் கிழவி" என்று கூறினீர்கள். பெரியவர்களுடன் பணிவுடன் நடத்தல் அழகைக் கொடுக்கும். இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கவே நான் உங்களை 'மடையா" என்று கூறினேன் என்றாள்.

அதைக் கேட்ட மன்னன் வெட்கடைந்தான். அவன் கிழவியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். கிழவி மன்னனை தன்னுடைய குடிசைக்கு அழைத்துச் சென்று உணவளித்துத் தன்னுடைய மகனை மன்னனுடன் நகரம் வரை துணைக்கு அனுப்பினாள்.

## சாதனை படைத்த வீரத் துறவி சுவாமி விவேகானந்தர்



(1863-1902):

இராம கிருஷ்ண பரமஹம்சரின் (த.க.) சீடர்களுள் முதன்மையானவர் விவேகானந்தர். தமது குருவின் அருளால் இவரும் சிறந்த ஞானியாக விளங்கினார். இவர் 1863 ஜனவரி 12ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். இவரது இயற்பெயர் நரேந்திரநாத தத்தர். இவரது தந்தையின் பெயர் விசுவநாத தத்தர். தாயின் பெயர் புவனேசுவரி.

நரேந்திரர் ஆங்கிலக் கல்வி பயின்று கல்லூரிப் பட்டம் பெற்றார். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் உள்ள பல நூல்களை நன்கு கற்றார். பின்னர், 'கடவுள் ஒருவரே; அவர் அன்பு உருவானவர்' என்னும் கொள்கையைப் பரப்பி வந்த பிரம சமாஜத்தில் சேர்ந்தார். இளமையிலேயே இவர் அறிவாற்றலும், தியானம் செய்யும் பழக்கமும் உடையவராக இருந்தார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரை முதன் முதல் சந்தித்தபோதே அவர்பால் ஈர்க்கப்பட்டார். குருவின் ஆணையைப் பெற்றுத் துறவியாகி 'விவேகானந்தர்' என்னும் பெயர் பூண்டார்.

இமயம் முதல் குமரி வரை நடந்தே பயணம் செய்து, குருநாதரின் செய்தியைப் பரப்பினார். கன்னியாகுமரிக்குச் சென்றபோது அங்கு கடற்கரைக்குச் சிறிது தொலைவில் கடலில் உள்ள ஒரு பாறைக்கு நீந்திச் சென்று, அதில் அமர்ந்து பாரதத் தாயை தியானம் செய்தார்.

அங்கிருந்து விவேகானந்தர் சென்னை வந்துசேர்ந்தார். அமெரிக்காவில் நடைபெறவிருந்த சர்வசமய மகாசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு விவேகானந்தரை நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். அவர்களின் விருப்பத்திற்கு இசைந்து விவேகானந்தர் அமெரிக்கா சென்று சர்வசமய மகாசபையில் கலந்துகொண்டு சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார். அதன்மூலமாக அவர் புகழ் உலகெங்கும் பரவியது.

பின்னர் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல இடங்களில் இந்து மதத்தின் பெருமைகளை எடுத்துக் கூறினார். இதன்மூலம் இந்து மதத்தின் சிறப்புகளை உலகறியச் செய்தார்.

இந்தியா திரும்பியபோது சென்னையில் இவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. விவேகானந்தா மீண்டும் ஒருமுறை மேலை நாடுகளுக்குச் சென்றார். இந்தியாவிலும் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் இவரது சீடர்களின் எண்ணிக்கை பெருகியது.

இந்தியா திரும்பிய விவேகானந்தர் 1897ஆம் ஆண்டில் இராமகிருஷ்ணரின் பெயரால் ஒரு சங்கம் நிறுவி, மக்களின் வறுமைப் பிணியை நீக்கும் தொண்டில் ஈடுபட்டார். 1898இல் கல்கத்தா அருகே பேலூர் மடத்தை நிறுவினார்.

விவேகானந்தர் தம்மை மறந்து தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். மன உறுதி, தெளிவு, முன்னறிவு, அமைதி, புலனடக்கம் எல்லாம் ஒருங்கே பெற்ற சிறந்த ஞானியாக விளங்கினார் விவேகானந்தர்.

39 ஆண்டுகளே வாழ்ந்த குறுகிய காலத்தில் இவர் அழியாத புகழும் ஆற்றலும் பெற்று விளங்கினார்.

மிகப் பல நூல்களையும் அருள் மொழிகளையும் வழங்கியுள்ளார்.

விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு அருகில் தியானம் செய்த பாறையின் மீது நினைவுச்சின்னமாக அழகிய மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. இது சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. இதனுள் விவேகானந்தரின் வெண்கலச் சிலையை நிறுவியுள்ளனர். இம்மண்டபத்தின் அடியில் தியான மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது.

### அறிந்துகொள்ளுங்களேன்...

## ஆட்டுக் கொழுப்பிலிருந்தும் கார் ஓட்டலாம்!

உலகில் மக்கள் தொகை பெருகிக்கொண்டே வருகிறது. அதற்கேற்பத் தேவைகளும் அதிகரித்து வருகிறது.



தற்பொழுது கிடைக்கும் நிலக்கரி, பெற்றோலியம் போன்ற எரி பொருட்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இல்லாது போய்விடும் என்ற அபாயம் உள்ளது. அதனால் இந்த எரிபொருள் கண்டுபிடிக்கும் பணி தொடர்கிறது. இதில் ஒன்றுதான் ஆட்டுக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்படும் எரிபொருள்.

நியு,சிலாந்து நாட்டில் 70 மில்லியன் ஆடுகள் உள்ளன. ஒவ்வொரு ஆட்டிலிருந்தும் 2 கிலோவுக்கும் அதிகமாக 'டேலோ' எனபபடும் கொழுப்புக் கிடைக்கிறது. சாதாரணமாக இந்தக் கொழுப்பு திட நிலையில் இருப்பதால் இயந்திரங்களில் டீசல் மாதிரி உபயோகிக்க முடியாது.

இந்தக் கொழுப்பை கிரியா ஊக்கிகளுடன் வெப்பமடையச் செய்து ஒரு மஞ்சள் நிறத் திரவமாக மாற்றப்பட்டு, டீசல செலவை மிச்சபடுத்தலாம்.

ஆனால், அதிகமாக டீசலுடன் கலந்தால் குளிர் காலங்களில் இயந்திரத்தில் அடைப்புகளை ஏற்படுத்திவிடும்.

டீசலில் இயங்கக் கூடிய வாகனங்களில் மாற்றம் எதுவும் செய்யாமலேயே இந்தப் புதிய எரிபொருளை உபயோகிக்கலாம். ஆனால் டீசலை விட விலைகொஞ்சம் அதிகமாகிறது.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்



## சிறுவர்களின் உள்ளம் பூப்போன்றது; முள்ளுகளால் அதனைக் கீறலாமா?



விதுரன்

'குருஇல்லா வித்தை பாழ்' என்பது தமிழ்ப் பழமொழி. குருவிடமன்றி தாமாகக் கற்றவர்களும் இந்த உலகில் இல்லாமல் இல்லை.

அப்படியானால் 'குரு இல்லா வித்தை பாழ்' என்று நம் முன்னோர்கள் ஏன் சொன்னார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

இங்குதான் பழமொழியின் உள்ளார்ந்தமான கருத்தியல் வெளிப்படுகின்றது.

குரு என்பவன் கற்றுக்கொடுப்பவன் மட்டுமல்ல. அவன் தன் மாணவரை வழிப்படுத்துபவன் - வழிகாட்டுபவன்.

வழிப்படுத்தல்களும், வழிகாட்டல்களும் இல்லாதவிடத்து சிறுவர்கள் பயணிக்கின்ற பாதைகளும் திசைமாறிப் போகின்றன.

இதனாலேயே தாரமும், குருவும் தலைவிதிப்படி என்ற இன்னொரு பழமொழி எழுகை பெறலாயிற்று.



இந்தப் பரந்த உலகில் ஒருவன் சாதனை படைக்கின்றானெனில், அல்லது நல்ல மனிதர் என்று பெயர் பெறுகிறாரெனில் அதற்குப் பின்னால் ஆசிரியர்களின் வழிகாட்டல்க்ள் இருககின்றன என்பது மறக்கமுடியாத உண்மை.

நல்ல ஆசிரியர்கள் கிடைக்கப்பெற்ற மாணவர்களின் எதிர்காலம் நிச்சயம் ஒளிமயமானதென்பதில் எந்த ஐயமுமில்லை.

நல்லாசான்கள் என்றால் யார்? அவர்கள் எங்கே கிடைப்பார்கள்? என்பது இப்போது நம்மிடம் எழுகின்ற இரண்டாவது கேள்வி.



கற்பிப்பவர் மட்டும் நல்ல குருவாகிவிட முடியாது என்ற உண்மையை கல்வி உலகம் ஏற்றுள்ளது.

மாணவர்களின் உளநிலை, அவர்களின் பின்புலம் போன்ற பல்வகை விடயங்களை அறிந்து மாணவர்களுக்கேற்றவாறு அவர்களுக்கு அறிவுபுகட்டுபவரே நல்லாசானாகின்றனர். கற்பிப்பதைப் புரிந்துகொள்ளாத மாணவர்களை தண்டிப்பது, அடித்துத் துன்புறுத்துவனவெதுவும் நல்லாசான்களுக் குரிய பண்பர்காது.

அன்பும் அரவணைப்புமே மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறக்கவைப்பன.

அதட்டல்களும், மிரட்டல்களும், பிஞ்சு உள்ளங்களை பிசைந்துவிடும். இது கல்வி மீது வெறுப்படையச் செய்வதுடன், பிஞ்சு உள்ளங்களை வக்கிரமடையவும் செய்து விடுகின்றன.

இவ்வக்கிர உணர்வுகளே பின்னாளில் கொலை, கொள்ளை, வல்லுறவுக் கொடூரம்,

## மாணவப் பருவத்தில் ஏற்படும் மனவக்கிரங்கள் வெடித்தால்...!

இரக்கமின்மை, அசுரத்தனம் என்ற இயல்புகளாகவோ அல்லது பயந்த சுபாவத்துடன் வீட்டிற்குள் முடங்கும் பரிதாபமாகவோ வெளிப்படுகின்றன.


மாணவர்களின் உள்ளம் பூப்போன்றது. அந்தப் பூப்போன்ற உள்ளத்தில் முட்கள் தைக்குமாயின் பூவின் இயல்பு - வடிவம் - நறுமணம் மாற்றமடையும். இது தவிர்க்க முடியாத நியதி.

எனவே, நல்மாணாக்கர்களை உருவாக்கும் மிகப் பொறுப்புவாய்ந்த பணி ஆசிரியர்களுடையதாகும். தன் பெற்றோரிடம் சொல்லமுடி யாதவற்றைக் கூட தன் ஆசானிடம் கூறும் மாணவச் சிறார்களைக் காண்கின்றோம்.

இதற்குக் காரணம்தான் என்ன?

ஆசிரியர் மீது மாணவர்கள் கொண்ட அளவு கடந்த நம்பிக்கையும், விசுவாசமும் அல்லவா?

இதை ஆசிரியர்கள் உணர்ந்துகொண்டால் ஒவ்வொரு மாணவனையும் என் பிள்ளையென்ற பார்வையில் நோக்கப்பட்டால் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாகும்போது அன்பு, இரக்கம், கருணை எனும் நன்மழை நாட்டில் பொழியும்.



சுனாமிக்குப் பின்னர், வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை (A.M.T.M.S) மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றல்செயற்பாட்டில் ....

(படம்: விஷ்ணு, சிவா - 24.10.2005)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை

யாழ்ப்பாணம்

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு-2005

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

(நேற்றைய தொடர்ச்சி...)

708. யா/க/5946 திருமதி. சிவபாக்கியம் மகாலிங்கம்.
709. யா/க/5951 திரு. சின்னத்தம்பி கருணைப்பிரகாசம்.
710. யா/க/5970 திருமதி. சின்னத்தங்கச்சி மயிலு.
711. யா/க/5981 திரு. இளையதம்பி சிவகுரு.
712. யா/க/5994 திருமதி. சபாநாயகி குமாரசாமி.
713. யா/க/6002 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
714. யா/க/6005 திருமதி. சிவலோகநாயகி சதாசிவம்.
715. யா/க/6012 திரு. சின்னையா இரத்தினம்.
716. யா/க/6027 திரு. சிவலை சுந்தரம்.
717. யா/க/6046 திருமதி. பதுமை தம்பு.
718. யா/க/6050 திரு. செல்வன் இராசதுரை.
719. யா/க/6053 திருமதி. பாக்கியம் இராசையா.
720. யா/க/6088 திரு. முருகன் கனகன்.
721. யா/க/6089 திருமதி. இராசம்மா நாராயணபிள்ளை.
722. யா/க/6098 திரு. சிற்றம்பலம் கிருஸ்ணபிள்ளை.
723. யா/க/6100 திருமதி. இரத்தினம் மாணிக்கம்.
724. யா/க/6102 திரு. வாரி பெரியதம்பி.
725. யா/க/6106 திரு. வல்லிபுரம் வேலுப்பபிள்ளை.
726. யா/க/6110 திருமதி. இராசம் சின்னக்கிளி.
727. யா/க/6113 திருமதி. சிவக்கொழுந்து நடராசா.
728. யா/க/6119 திரு. பரமுப்பிள்ளை சின்னத்தம்பி.
729. யா/க/6129 திருமதி. இலட்சுமியம்மா சாரங்கன்.
730. யா/க/6148 திருமதி. நல்லம்மா திருநாவுக்கரசு.
731. யா/க/6149 திரு. மயில்வாகனம் சின்னையா.
732. யா/க/6162 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை.
733. யா/க/6163 செல்வி. றோகினி தினகரம்பிள்ளை.
734. யா/க/6181 திருமதி. பாக்கியம் பெரியதம்பி.
735. யா/க/6183 திரு. கதிர்காமு கதிரித்தம்பி.
736. யா/க/6184 திருமதி. பாக்கியம் பிலிப்பு.
737. யா/க/6197 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி.
738. யா/க/6207 திரு. முருகையா நாகராசா.
739. யா/க/6208 திருமதி. இராசம்மா வல்லி.
740. யா/க/6213 திரு. கதிரேசு மகாலிங்கம்.
741. யா/க/6218 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்தம்பி.
742. யா/க/6225 திரு. இளையதம்பி நவரத்தினம்.
743. யா/க/6226 திரு. தாமு வேலுப்பிள்ளை.
744. யா/க/6238 திரு. பாலன் சின்னத்துரை.
745. யா/க/6242 திரு. கணபதிப்பிள்ளை இராசையா.
746. யா/க/6249 திருமதி. குகசக்தி ஏகாம்பரம்.
747. யா/க/6250 திரு. குழந்தை தர்மலிங்கம்.
748. யா/க/6278 திரு. சின்னையா சின்னத்தம்பி.
749. யா/க/6279 திருமதி. தெய்வானை வீரகத்தி.
750. யா/க/6288 திரு. கனகசபை கணேசபிள்ளை.
751. யா/க/6302 திரு. ராமலிங்கம் இரத்தினம்.
752. யா/க/6315 திருமதி. இலட்சுமி கிட்டிணபிள்ளை.
753. யா/க/6320 திருமதி. சிவக்கொழுந்து நடேசன்.
754. யா/க/6329 திரு. நாகேந்திரஐயர் கணேசஐயர்.
755. யா/க/6333 திருமதி. இலட்சுமிப்பிள்ளை கந்தவனம்.
756. யா/க/6370 திரு. பஞ்சாட்சரக்குருக்கள் சச்சிதானந்தக்குருக்கள்.
757. யா/க/6371 திரு. வல்லியப்பர் பொன்னுத்துரை.
758. யா/க/6375 திரு. சங்கரப்பிள்ளை தம்பிஐயா.
759. யா/க/6376 திரு. சிலம்பு கந்தசாமி.
760. யா/க/6392 திருமதி. லட்சுமி பரமு.
761. யா/க/6401 திருமதி. பத்தினிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை.
762. யா/க/6402 திருமதி. பத்தினிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை.
763. யா/க/6403 திரு. மாரிமுத்து சின்னத்தம்பி.
764. யா/க/6425 திருமதி. இராசேஸ்வரி மகாதேவன்.
765. யா/க/6426 திரு. நாகப்பர் கதிர்காமத்தம்பி.
766. யா/க/6435 திரு. சரவணமுத்து சிவபாதசிங்கம்.
767. யா/க/6444 திரு. வல்லிபுரம் நாகப்பர்.
768. யா/க/6447 திருமதி. திரேசம்மா செபமாலை.
769. யா/க/6450 திருமதி. சியோன்மணி சிங்கன்.
770. யா/க/6460 திரு. சிற்றம்பலம் வீரகத்தி.
771. யா/க/6489 திருமதி. சரஸ்வதி சிவபாதம்.
772. யா/க/6492 திருமதி. செல்லம்மா வேலும்மயிலும்.
773. யா/க/6494 திரு. கணபதி தம்பிராசா.
774. யா/க/6497 திருமதி. இலட்சுமி கனகசபை.
775. யா/க/6504 திருமதி. கனகம்மா முத்துக்குமாரு.
776. யா/க/6506 திரு. பொன்னன் துரையன்.
777. யா/க/6508 திரு. வீரகத்திப்பிள்ளை சோமசுந்தரம்.
778. யா/க/6526 திருமதி. இலட்சுமிப்பிள்ளை மார்க்கண்டு.
779. யா/க/6534 திருமதி. சிவகாமிப்பிள்ளை திருநாவுக்கரசு.
780. யா/க/6538 திருமதி. இரத்தினம் வல்லிபுரம்.
781. யா/க/6539 திரு. பொன்னையா சங்கரப்பிள்ளை.
782. யா/க/6548 திரு. தவசிப்பிள்ளை விசாகமுத்து நடராசா.
783. யா/க/6550 திருமதி. [illegible]லட்சுமி குலசிங்கம்.
784. யா/க/6573 திருமதி. மனோன்மணி சின்னத்தம்பி.
785. யா/க/6584 திரு. வேலுப்பிள்ளை இராசையா.
786. யா/க/6599 திரு. சந்திரசேகரம் வல்லிபுரம்.
787. யா/க/6602 திருமதி. பாறுவதி வீரகத்தி.
788. யா/க/6606 திரு. சந்திரசேகரர் விசுவநாதர்.
789. யா/க/6610 திரு. கந்தப்பு நமசிவாயம்.
790. யா/க/6621 திரு. வல்லி சண்முகம்.
791. யா/க/6625 திருமதி. மேரிகலீன் பீற்றர்பிள்ளை.
792. யா/க/6627 திருமதி. வள்ளி பொன்னன்.
793. யா/க/6633 திரு. சின்னையா தங்கரத்தினம்.
794. யா/க/6635 திரு. வேலாயுதம் முருகேசு.
795. யா/க/6641 திரு. சபாபதிப்பிள்ளை செல்லத்துரை.
796 யா/க/6653 திருமதி. கனகம்மா சதாசிவம்.
797. யா/க/6670 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு.
798. யா/க/6675 திருமதி. சரஸ்வதி பொன்னையா.
799. யா/க/6697 திரு. சடையர் பாலசுப்பிரமணியம்.
800. யா/க/6702 திருமதி. தங்கம்மா இரங்கநாதன்.
801. யா/க/6715 திருமதி. தங்கமுத்து சிங்காரவேலு.
802. யா/க/6723 திருமதி. இராசம்மா சிதம்பரப்பிள்ளை.
803. யா/க/6724 திருமதி. நல்லம்மா சுப்பிரமணியம்.
804. யா/க/6726 திருமதி. சின்னக்கிளி நாகலிங்கம்.
805. யா/க/6730 திருமதி. புவனேஸ்வரி வல்லிபுரம்.
806. யா/க/6731 திரு. வீரன் கிட்டிணர்.
807. யா/க/6735 திருமதி. இராசம்மா தில்லைநாதன்.
808. யா/க/6740 திருமதி. தங்கம் நாகமுத்து.
809. யா/க/6750 திருமதி. மேரிமக்டீன் அரியரட்ணம்.
810. யா/க/6751 திருமதி. அன்னரத்தினம் தியாகராசா.
811. யா/க/6764 திருமதி. செல்வநேசம் வீரவாகு.
812. யா/க/6766 திரு. கந்தையா பிள்ளையினார்.
813. யா/க/6769 திரு. கந்தவனம் தாமோதரம்பிள்ளை.
814. யா/க/6770 திரு. தம்பையா இராசரட்ணம்.
815. யா/க/6780 திரு. வைரவன் கிருஷ்ணன்.
816. யா/க/6784 திருமதி. மீனாட்சி கார்த்திகேசு.
817. யா/க/6795 திரு. கனகசபை தங்கவேல்.
818. யா/க/6796 திருமதி. அன்னம்மா மார்க்கண்டு.
819. யா/க/6804 திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை.
820. யா/க/6809 திருமதி. மகேஸ்வரி பொன்னையா.
821. யா/க/6821 திரு. இரத்தினம் தர்மரத்தினம்.
822. யா/க/6826 திரு. சிதம்பரப்பிள்ளை நடராசா.
823. யா/க/6839 திருமதி. யோகம்மா மாணிக்கம்.
824. யா/க/6857 திருமதி. பாறுபதிப்பிள்ளை கந்தசாமி.
825. யா/க/6882 திருமதி. சின்னம்மா பொன்னையா.
826. யா/க/6891 திருமதி. அன்னம்மா கிருஸ்ணன்.
827. யா/க/6896 திருமதி. மனோன்மணி சிவகுமாரசாமி.
828. யா/க/6916 திருமதி. மீனாட்சியம்மா செல்லத்துரை.
829. யா/க/6919 திரு. வேலன் கந்தசாமி.
830. யா/க/6920 திரு. கதிரன் மாணிக்கம்.
831. யா/க/6922 திருமதி. செல்லம்மா சுந்தரம்.
832. யா/க/6942 திருமதி. சிவக்கொழுந்து கந்தசாமி.
833.. யா/க/6952 திருமதி. சரஸ்வதி நடராஜா.
834. யா/க/6965 செல்வி. சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை.
835. யா/க/6970 திரு. நல்லதம்பி நடராசா.
836. யா/க/6975 திருமதி. சின்னம்மா சின்னத்துரை.
837. யா/க/6982 திரு. வல்லிபுரம் செல்லத்துரை.
838. யா/க/6988 திருமதி. தங்கமணி சிதம்பரப்பிள்ளை.
839. யா/க/6990 திரு. முத்து தங்கவேல்.
840. யா/க/6991 திரு. செல்லையா கனகராசா.
841. யா/க/6994 திருமதி. கணபதிப்பிள்ளை இராசரத்தினம்.
842. யா/க/7006 திருமதி. திலகவதி கந்தசாமி.
843. யா/க/7012 திருமதி. தங்கம்மா கந்தப்பு.
844. யா/க/7029 திரு. வேலன் சின்னத்தம்பி.
845. யா/க/7031 திரு. கணபதிப்பிள்ளை சின்னத்துரை.
846. யா/க/7049 திருமதி. பத்மாவதி நவரட்ணசிங்கம்.
847. யா/க/7055 திரு. அலோசிப்பிள்ளை மரியாம்பிள்ளை.
848. யா/க/7056 திருமதி. இரத்தினம் பொன்னுத்துரை.
849. யா/க/7059 திரு. நாகநாதன் நடராசா.
850. யா/க/7069 திருமதி. அழகம்மா நாகலிங்கம்.
851. யா/க/7070 திருமதி. இரத்தினம் மாணிக்கம்.
852. யா/க/7074 திரு. பரமு கிருஸ்ணபிள்ளை.
853. யா/க/7077 திருமதி. தங்கம்மா சின்னத்தம்பி.
854. யா/க/7098 திரு. கந்தையா நடராசா.
855. யா/க/7101 திரு. கிட்டிணர் பாலசிங்கம்.
856. யா/க/7104 திரு. பழனி தர்மராசா.
857. யா/க/7108 திருமதி. பரமேஸ்வரி வல்லிபுரநாதன்.
858. யா/க/7114 திருமதி. தெய்வி கந்தன்.
859. யா/க/7119 திருமதி. தங்கம்மா கிருஸ்ணன்.
860. யா/க/7126 திரு. இராசரத்தினம் சபாநாதன்.
861. யா/க/7127 திருமதி. பவளம் ஐயாத்துரை.
862. யா/க/7136 திரு. சின்னத்தம்பி குணரத்தினம்.
863. யா/க/7137 திரு. பழனி சங்கரன்.
864. யா/க/7142 திருமதி. சொர்ணம்மா கிருஷ்ணபிள்ளை.
865. யா/க/7144 திருமதி. இலட்சுமி இளையதம்பி.
866. யா/க/7145 திருமதி. சின்னப்பிள்ளை சின்னவன்.
867. யா/க/7149 திருமதி. சிவப்பி மாணிக்கம்.
868. யா/க/7152 திரு. சின்னத்தம்பி சிவபாதம்.
869. யா/க/7154 திரு. இராமலிங்கம் விஸ்வலிங்கம்.
870. யா/க/7159 திருமதி. வள்ளிப்பிள்ளை செல்லையா.
871. யா/க/7164 திருமதி. சரஸ்வதியம்மா மயில்வாகனம்.
872. யா/க/7171 திரு. வைரமுத்து நாகலிங்கம்.
873. யா/க/7184 திரு. கந்தன் சின்னத்தம்பி.
874. யா/க/7196 திரு. சிலம்பன் முருகன்.
875. யா/க/7197 திரு. மயிலன் சண்முகம்.
876. யா/க/7203 திருமதி. செல்லம்மா சதாசிவம்.
877. யா/க/7204 திருமதி. தங்கமுத்து சுப்பிரமணியம்.
878. யா/க/7208 திருமதி. அழகம்மா பொன்னையா.
879. யா/க/7254 திருமதி. தங்கம்மா ஆசைப்பிள்ளை.
880. யா/க்/7261 திரு. அண்ணாமலை மகாதேவன.
881. யா/க/7278 திரு. கந்தப்பு பொன்னம்பலம்.
882. யா/க/7298 திரு. சின்னத்தம்பி தர்மராசா.
883. யா/க/7334 திருமதி. இரத்தினம் செல்லக்குட்டி.
884. யா/க/7348 திருமதி. சின்னாச்சி ஆள்வாப்பிள்ளை.
885. யா/க/7377 செல்வி. பாலபரமேஸ்வரி வேலுப்பிள்ளை.
886. யா/க/7381 திருமதி. முத்துலக்சுமி மாணிக்கம்.
887. யா/க/7397 திருமதி. இந்திராணியம்மாள் சுந்தரலிங்கம்.
888. யா/க/7417 திருமதி. சரஸ்வதி கதிரவேலு.
889. யா/க/7420 திருமதி. பரலோகநாயகி அருமைநாயகம்.
890. யா/க/7452 திரு. செல்லையா வல்லிபுரம்.
891. யா/க/7457 திரு. கணபதிப்பிள்ளை வீரகத்தி.
892. யா/க/7468 திருமதி. கணபதிப்பிள்ளை பாலசிங்கம்.
893. யா/க/7481 திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தப்பு.
894. யா/க/7486 திரு. கந்தவனம் சுப்பிரமணியம்.
895. யா/க/7487 திருமதி. அன்னமுத்து தம்பையா.
896. யா/க/7490 திருமதி. நாகம்மா குமாரசாமி.
897. யா/க/7493 திருமதி. பிறிசித்தம்மா நீக்கொலஸ்.
898. யா/க/7496 திருமதி. அன்னம்மா சோமசுந்தரம்.
899. யா/க/7504 திருமதி. சின்னாச்சி சபாநாயகம்.
900. யா/க/7516 திரு. சிவக்கொழுந்து சின்னத்தம்பி.
901. யா/க/7543 திரு. தேவசகாயம் வேதநாயகம்.
902. யா/க/7561 திரு. ஐயம்பிள்ளை கந்தையா.
903. யா/க/7562 திரு. வேலன் சபாபதி.
904. யா/க/7573 திரு. கந்தன் சின்னப்பு.
905. யா/க/7574 திரு. சின்னத்தம்பி கதிரவேற்பிள்ளை.
906. யா/க/7577 திரு. பஞ்சநாதக்குருக்கள் மகேஸ்வரசர்மா.
907. யா/க/7578 செல்வி. வள்ளியம்மை வேலுப்பிள்ளை.
908. யா/க/7603 திரு. முருகேசு தங்கராசா.
909. யா/க/7604 திருமதி. லட்சுமிப்பிள்ளை வல்லிபுரம்.
910. யா/க/7610 திரு. சரவணமுத்துக்குமாரசூரியர் அருளம்பலக்குமாரசூரியர்.
911. யா/க/7629 திரு. ஆறுமுகம் வீரகத்தி.
912. யா/க/7631 திரு. சின்னம்மா இரத்தினம்.
913. யா/க/7681 திருமதி. சின்னம்மா சுப்பிரமணியக்குருக்கள்.
914. யா/க/7689 திரு. ஆறுமுகம் பரராசசிவம்.
915. யா/க/7693 திரு. சின்னத்தம்பி கருணாசிங்கம்.
916. யா/க/7709 திருமதி. இராசம்மா ஆறுமுகம்.
917. யா/க/7722 திரு. இளையகுட்டி நடராசா.
918. யா/க/7726 திரு. பாலன் சுந்தரன்.
919. யா/க/7745 திரு. ஞானியர் கணேசையர்.
920. யா/க/7746 திருமதி. பொன்னம்மா கந்தையா.
921. யா/க/7768 திரு. வல்லிபுரம் தியாகராசா.
922. யா/க/7789 திருமதி. தஞ்சம்மா சின்னத்துரை.
923. யா/க/7804 திரு. நடேசு பாஸ்கரன்.
924. யா/க/7806 திரு. கந்தையா பொன்னையா.
925. யா/க/7820 திருமதி. தங்கமுத்து கந்தையா.
926. யா/க/7823 திருமதி. மகேஸ்வரி கனகசபை.
927. யா/க/7847 திரு. முருகேசு இளையதம்பி.
928. யா/க/7848 திருமதி. இலட்சுமி சுப்பன்.
929. யா/க/7858 திரு. சீனியன் கந்தையா.
930. யா/க/7868 திரு. வீரகததி சின்னத்துரை.
931. யா/க/7880 திரு. மெல்லியன் மாணிக்கம்.
932. யா/க/7901 திரு. கந்தசாமி பரமானந்தம்.
933. யா/க/7913 திருமதி. அன்னபூரணம் கதிர்காமத்தம்பி.
934. யா/க/7926 திரு. கணபதிப்பிள்ளை முருகேசு.
935. யா/க/7938 திரு. சின்னையா வைத்திலிங்கம்.
936. யா/க/7943 திருமதி. நாகரத்தினம் பொன்னையா.
937. யா/க/7944 திருமதி. மீனாட்சி சண்முகம்.
938. யா/க/7949 திருமதி. பாக்கியம் பொன்னுத்துரை.
939. யா/க/7968 திரு. வல்லிபுரம் குமாரசாமி.
940. யா/க/7973 திரு. செல்வநாயகம் சிவலிங்கம்.
941. யா/க/7981 திரு. குமரேசு வீரவாகு.
942. யா/க/7993 திருமதி. சின்னம்மா வல்லி.
943. யா/க/8003 திரு. கிருஸ்ணபிள்ளை எதிர்வீரசிங்கம்.
944. யா/க/8005 திரு. கந்தசாமி தங்கராசா.
945. யா/க/8012 திரு. இளையதம்பி கணபதிப்பிள்ளை.
946. யா/க/8025 திருமதி. சோபனம் இராசா.
947. யா/க/8030 திரு. சீனிவாசகம் சண்முகம்.
948. யா/க/8038 திருமதி. இலட்சுமி சிதம்பரம்.
949. யா/க/8040 திருமதி. சிவகாமிப்பிள்ளை மாணிக்கம்.
950. யா/க/8046 திரு. வல்லி நாகநாதி.
951. யா/க/8049 திரு. கந்தையா குமாரசுவாமி.
952. யா/க/8059 திரு. சின்னதம்பி ஆறுமுகம்.
953. யா/க/8060 திருமதி. பொன்னம்மா இரத்தினம்.
954. யா/க/8067 செல்வி. விசாலாட்சி வேலுப்பிள்ளை.
955. யா/க/8075 திரு. செல்லையா தங்கராசா.
956. யா/க/8086 திரு. குமரையா பரமசிவம்.
957. யா/க/8090 திருமதி. சின்னத்தங்கம் செல்லன்.
958. யா/க/8112 திருமதி. சின்னப்பிள்ளை இராசன்.
959. யா/க/8122 திரு. சின்னக்குட்டி சின்னையா.
960. யா/க/8135 திரு. வீரகத்தி சிதம்பரபிள்ளை.
961. யா/க/8149 திரு. கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை.
962. யா/க/8150 திரு. வல்லிபுரம் கார்த்திகேசு.
963. யா/க/8166 திரு. குணரத்தினம் சின்னத்தம்பி.
964. யா/க/8167 திருமதி. செல்லாச்சி பொன்னம்பலம்.
965. யா/க/8176 திரு. ஆறுமுகம் சாம்பசிவம்.
966. யா/க/8177 திரு. ஆறுமுகம் நடராசா.
967. யா/க/8182 திருமதி. செல்வபாக்கியம் இராசதுரை.
968. யா/க/8186 திரு. நாகன் தில்லையன்.
969. யா/க/8192 திரு. கணபதிப்பிள்ளை செல்வநாயகம்.
970. யா/க/8202 திருமதி. மகேஸ்வரி செல்லத்துரை.
971. யா/க/8204 திருமதி. அன்னலட்சுமி கந்தையா.
972. யா/க/8206 திரு. சண்முகம் நடேசன்.
973. யா/க/8218 திரு. பாலன் பொன்னன்.
974. யா/க/8221 திருமதி. சொர்ணம்மா சுப்பிரமணியம்.
975. யா/க/8224 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்.

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

## குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

1. யா/க/2 திரு. தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்.
2. யா/க/132 திருமதி. பாக்கியம் சண்முகம்.
3. யா/க/306 திருமதி. செல்லம்மா பொன்னையா.
4. யா/க/337 திருமதி. நாகேஸ்வரி கதிரவேற்பிள்ளை.
5. யா/க/550 திரு. திருநாவுக்கரசு விக்னேஸ்வரதாசன்.
6. யா/க/591 திருமதி. செல்வக்குமாரி அருளானந்தசிவம்.
7. யா/க/783 திருமதி. யோகேஸ்வரி ஆறுமுகநாதன்.
8. யா/க/828 திருமதி. சரஸ்வதி இரத்தினசிங்கம்.
9. யா/க/848 செல்வி. விமலேஸ்வரி கந்தையா.
10. யா/க/1034 திருமதி. பார்பதிப்பிள்ளை வடிவேலு.
11. யா/க/1158 திருமதி. சந்திரிகா செல்வராசா.
12. யா/க/1241 திருமதி. சாந்தினி சிவானந்தம்பிள்ளை.
13. யா/க/1261 திருமதி. அன்னபூரணம் சுப்பிரமணியம்.
14. யா/க/1273 திரு. நடராசா விஜயரத்தினம்.
15. யா/க/1381 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜா.
16. யா/க/1399 திருமதி. இராசேஸ்வரி இராசரத்தினம்.
17. யா/க/1500 திரு. சீனித்தம்பி சித்தரஞ்சன்.
18. யா/க/1515 திரு. கதிரேசு செல்வராசா.
19. யா/க/1992 திருமதி. சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி.
20. யா/க/2041 திருமதி. றெஜினாஞானமணி மதுரநாயகம்.
21. யா/க/2060 திரு. ஆறுமுகம் சிவநாதன்.
22. யா/க/2064 திரு. ஆறுமுகம் ஆனந்தராசா.
23. யா/க/2219 திரு. கந்தசாமி சச்சிதானந்தம்.
24. யா/க/2549 திரு. சின்னத்தம்பி மகேசன்.
25. யா/க/2565 திரு. சின்னத்துரை செல்லையா.
26. யா/க/2656 திரு. வேலுப்பிளளை செல்லத்துரை.
27. யா/க/2678 திருமதி. செல்வராணி தவராஜா.
28. யா/க/2730 திரு. சின்னத்துரை அருந்தவராசா.
29. யா/க/3085 திருமதி. பரமேஸ்வரி சிவராசா.
30. யா/க/3089 திருமதி. பாலபரமேஸ்வரி சண்முகராசா.
31. யா/க/3097 திருமதி. இரஞ்சிதமலர் மகாலிங்கம்.
32. யா/க/3585 திரு. கந்தையா சிவபாதசுந்தரம்.
33. யா/க/3672 திருமதி. இரஞ்சினிதேவி சோதிநாகரட்ணம்.
34. யா/க/3696 திரு. இளையதம்பி செல்லையா.
35. யா/க/3959 திருமதி. யோகம்மா சின்னத்துரை.
36. யா/க/3988 திரு. மாணிக்கம் ஆனந்தராசா.
37. யா/க/4040 செல்வி. காந்திமதி சிதம்பரப்பிள்ளை.

# டெல்லியில் தொடர் குண்டுவெடிப்பு பலியானோர் தொகை 245 ஆக உயர்வு

## 800 ற்கும் மேற்பட்டோர் படுகாயம்



(புதுடெல்லி)

டெல்லியில் மக்கள் அதிகம் கூடும் மார்க்கெட்டுக்களில் நேற்று முன்தினம் மாலை அடுத்தடுத்து 4 இடங்களில் தொடர்ந்து இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 245பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் சுமார் 800ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

டெல்லி தொடர் குண்டுவெடிப்புக்கு லஷ்கர் -இ- தொய்பா இயக்கத்தின் தீவிரவாதிகள் தான் காரணம் என்று தெரியவந்துள்ளது. அடுததடுத்து, குண்டுகள் வெடித்ததால மக்கள் பீதியடைந்து சிதறி ஓடினர். இதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் காயம் அடைந்துள்ளனர்.

டெல்லியின் மையப் பகுதியில் ரயில் நிலையத்தை ஒட்டி உள்ளது பாஹர்கஞ்ச் மார்க்கெட். இங்கு ஏராளமான கடைகள் உள்ளன. தீபாவளி நேரமானதால் புத்தாடை மற்றும் பொருட்கள் வாங்க மக்கள் புற்றீசல் போல அலை மோதிக்கொண்டிருந்தனர்.

**மோட்டார் சைக்கிளில் குண்டுவெடிப்பு**

இந்நிலையில் பி.ப.5.30மணியளவில், மார்க்கெட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து காதை செவிடாக்கும் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடிததது. இதில் அந்த மார்க்கெட்டே அதிர்ந்தது.

குண்டு வெடித்ததில் அங்கிருந்த மக்கள் தூக்கி வீசப்பட்டனர். கைகால் சிதைந்து குற்றுயிராக கிடந்தனா. இதில் சுமார் 90பேர் வரை பலியாகினர். குண்டுச் சததம் கேட்டதும் பயந்து ஓடியதில் நெரிசலில் சிக்கி பலர் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் தீயணைக்கும் படையினரும், பொலிஸாரும் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

குண்டுவெடித்த இடம் போர்க்களம் போல காடசியளித்தது. அந்தப் பகுதியில் இருந்த கடைகள் அனைத்தும் இடிந்து கிடந்தன. சில கடைகள் தீப்பிடித்து எரிந்தன. அதைத் தீயணைப்புப் படையினர் அணைத்தனர். மார்க்கெட்டுகளில் இருந்த பொருட்கள் எல்



லாம் சிதறிக்கிடந்தன.

**பஸ்ஸில் குண்டு வெடிப்பு**

பாஹர்கஞ்ச் மார்க்கெட்டில் குண்டு வெடித்து 35நிமிடங்களில் சரோஜினி நகர் மார்க்கெட் பகுதியில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. அது ஒரு பஸ்ஸில் வைக்கப்பட்டு இருந்தது. அது வெடித்ததில் அங்கே நின்ற 85பேர் உடல் சிதறிப் பலியாயினர். மற்றவர்கள் தூக்கிவீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

குண்டு வெடித்ததில் மார்க்கெட்டுகளில் இருந்த கடைகள் சிதைந்து சின்னாபின்னமாகின. தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். குண்டுவெடிப்பில் உடல்சிதறிப் பலியானோரின் தசைகள் கடைகளின் கூரைகளில் தெறித்து விழுந்தன. அந்தக் காட்சி பெரும் கொடூரமாக இருந்தது. அதைப் பார்த்தவர்கள் மிரண்டுபோய் இருந்தனர்.

**3-வது குண்டு வெடிப்பு**

சரோஜினி நகர் மார்க்கெட்டில் குண்டு வெத்த சில நிமிடங்களில் தெற்கு டெல்லியில் ஒக்லா பகுதியில் உள்ள கோவிந்தபுரியில் மற்றொரு குண்டு வெடித்தது. அதில் அந்தப் பகுதியில் இருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டனர். அதில் 40 பேர் உடல் சிதறிப் பலியாயினர். மற்றவர்கள் படுகாயம் அடைந்தனர்.

அந்தப்பகுதியில் சென்ற, நின்றுகொண்டிருந்த வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. அங்குள்ள கட்டடங்கள், வீடுகளில் உள்ள ஜனனல, கண்ணாடிகள் உடைந்தன. இதனால அந்தப் பகுதியில் இருந்தவர்கள் பீதியில் அலறி அடித்து ஓடினார்கள்.

**கோல்மார்க்கெட்டில் குண்டுவெடிப்பு**

மததிய டெல்லியில் உள்ள கோல் மார்க்கெட்டில் அடுத்த சில நிமிடங்களில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. அதில் 30பேர் பலியானதுடன பலர் படுகாயம் அடைந்தனர்.



**வெடிக்காத குண்டு**

டெல்லியில் சாந்தினி சவுக் பகுதியில் வெடிக்காத குண்டு ஒன்று கிடந்தது. அந்தப் பகுதியில் இருந்த மக்களை அப்புறப்படுத்தி விட்டு அதை பொலிஸார் செயலிழக்கச் செய்தனர். 4 குண்டு வெடிப்புகளிலும் பெண்கள், குழந்தைகள் உட்பட 245பேர் பலியானதுடன் சுமார் 800ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் பலர் கை, காலகளை இழந்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் லேடி ஹார்டிங், சப்தர்ஜங், ஆர்.எம்.எல் ஆகிய மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் உயிருக்கு போராடிக் கொண்டு இருப்பதாகவும் அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



**மருத்துவமனைகளில் நெரிசல்**

பலியானோரின் உடல்கள் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டிருப்பதால் இறநதவர்களின் உறவினர்கள் மருத்துவமனைக்கு திரண்டவண்ணமுள்ளனர். மருத்துவமனை முழுவதும் காயம் அடைந்தவர்களின் மரண ஓலம் கேட்கிறது.

1993ஆம் ஆண்டு மும்பையை உலுக்கிய தொடர் வெடிகுண்டுச் சம்பவம் போன்று இந்த வெடிகுண்டுச் சம்பவம் நேற்று முன்தினம் டெல்லியை கலக்கிவிட்டது.




**ஆர்.டி.எக்ஷ் குண்டுகள்**

4 இடங்களிலும் வெடித்தது சக்திவாய்ந்த ஆர்.டி.எக்ஸ் குண்டுகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து டெல்லி முழுவதும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. முக்கிய அலுவலகங்கள், கட்டடங்களில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் விமான நிலையங்களில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மககள் விழிப்புடன் இருக்கும்படி டெல்லி நகர பொலிஸ் கமிஷனர் கேட்டுள்ளார். கேட்பாரற்றுக் கிடக்கும் பொருட்களை யாரும தொடக்கூடாது என்றும் அவைபற்றியும் சந்தேகப்படும்படி திரிபவர்கள் பற்றியும் உடனடியாக பொலிஸுக்கு தகவல் கொடுக்கும் படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**டெல்லி நகர எல்லைக்கு சீல்**

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களால் டெல்லி நகர மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். அடுத்து எங்கு குண்டுவெடிக்குமோ என்ற கலக்கத்தில் உள்ளனர். தொடர் குண்டு வெடிப்பை தொடர்ந்து டெல்லி நகர எல்லைகளுக்கு பொலிஸார் சீல் வைத்துள்ளனர். நகரமும் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குண்டுவைத்த தீவிரவாதிகளைத் தேடி நகரம் முழுவதும் வலை விரிக்கப்பட்டுள்ளது.

டெல்லி நகரம் முழுவதும் நடந்த அதிரடிச் சோதனையில் 10பேர் பிடிபட்டனர். அவர்களைத் தனி அறையில் அடைத்துவைத்து விசாரணை நடத்தப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புக்கு எந்தவொரு தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் லஷ்கர்-இ- தொய்பா இயக்கம் மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது. (ற)

# ஆற்றுக்குள் ரயில் கவிழ்ந்து ஆந்திராவில் பாரிய விபத்து

## 260 பேர் பலி



ஆந்திர மாநிலத்தில் புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் ஒரு ஆற்றின் மீது அமைக்கப்பட்டிருந்த ரயில்வே பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதை இரவு நேரத்தில் கவனிக்காமல சென்றபோது பயணிகள் ரயில் ஒன்று தடம்புரண்டு ஆற்றுக்குள் வீழ்ந்ததில் சுமார் 260பயணிகள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆற்றில் ரயில் பெட்டிகள் மூழ்கியதில் அதிலிருநத 260 பயணிகள் உயிரிழந்திருக் கலாமென அஞ்சப்படுகின்ற போதிலும் உயிரிழப்பு அதிகரிக்கலாமென தெரிவிக்கப் படுகிறது.

ரேப்பள்ளியில் இருந்து செகந்திராபாத்திறகு வெள்ளிக்கிழமை இரவு 1.30 மணிக்கு



எண். 415 டெல்டா பாஸ்ட் பயணிகள் ரயில் புறப்பட்டது. செகந்திராபாத்திற்கு சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு வந்து சேரவேண்டிய ரயில் அதிகாலை 4.40 மணிக்கு விபத்துக்குள்ளாயிற்று.

ரயில் என்ஜின் பாலப்பகுதியில் குப்புற விழ அதன் மீது ஒன்றன் பின் ஒன்றாக 10 பெட்டிகள் விழுந்தன. மீதமிருந்த 8 பெட்டிகளில் நான்கு பெட்டிகள் தடம் புரண்டு விட்டன. மற்ற நான்கு பெட்டிகளும் சேதமின்றித் தப்பின. ஒவ்வொரு பெட்டியிலும் குறைந்தது 75 பயணிகள் இருந்திருக்கக்கூடும் என்றும் குண்டூரில் எல்லாப் பெட்டிகளிலும் இருக்கைகள் நிரம்பி விட்டதாகவும் கூறப்படுகிறது.

ரயிலில் 1400 பயணிகள் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒன்றின் மேல் ஒன்றாக விழுந்த ரயில் பெட்டிகளில் சிக்கிய பயணிகள் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டும் கம்பிகளுக்குள் நுழைந்தும் கதவுகளை வெளியே நெம்பித் தள்ளிக்கொண்டும வெளியேவர முடிந்தவர்கள் உயிா் தப் பினா். விபத்துப்பற்றி அறிந்ததும் முப்படை யினரும் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இராணுவ வீரர்களின் படைப்பிரிவு ஒன்று 6 படகுகளுடன் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றது. இராணுவ வீரர்கள் கேன கட்டர்களைக்கொண்டு நீரில் மூழ்கிக் கிடந்த பெட்டிகளை வெட்டி உயிரிழந்த பயணிகளின் உடல்களை எடுக்க உதவினர். விமானப்படை விமானங்கள் தாழப்பறந்து விபத்து நடந்த இடத்தில் இருந்து வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உடல்கள் மிதக்கின்றனவா என்று கண்காணித்தனர்.

மரங்களில் சிக்கிய சில உடல்களை விமா



னங்கள் அடையாளம் கண்டுபிடித்தன. ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

'இதில் உயிரிழந்த பயணிகளின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபா வழங்கபபடும். இக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ரயில்வேயில் வேலை வழக்கப்படும்' என்று மத்திய ரயில்வே இணையமைச்சர் வேலு அறிவித்துள்ளார். இவ் விபத்துக் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ற)

# சச்சின் 32

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை



(இந்தத் தொடரில் தான் டெஸ்ட் போட்டிகளில் சச்சின் தனது அதிகபட்ச ரன்களை (165) எடுத்தான். ஒரு டெஸ்ட் போட்டியில், காம்ப்ளி 224 ரன்கள் குவித்தான்!) சச்சினுக்குப் பிறகு இந்திய அணிக்குள் நுழைந்த காம்ப்ளி, அவனை முந்திக் கொண்டு டெஸ்ட் போட்டிகளில் இரட்டை சதம் அடித்தான். தொடர்ந்து ஒருநாள் போட்டியிலும் சதம் அடித்தான். இந்தக் காரணங்களால், இந்தியாவுக்காக காம்ப்ளி விளையாடத்து வங்கி சில மாதங்களுக்குள் "காம்பளி, சச்சினை விடத் திறமைசாலியா?" என்னும் விவாதங்கள் தொடங்கின. இருவருடைய புள்ளி விபரங்களையும் அலசி ஆராய்ந்த பத்திரிகைகள், "சச்சினை விட வேகமாக ரன் சேர்க்கிறார் காம்ப்ளி" என்றும், சச்சினின் இயற்கையான திறமைகள் காம்ப்ளியிடம் இல்லை என்றும் சிண்டுமுடிய முயன்றன.

இந்தக் களேபரங்கள் எவையும் சச்சினையோ, காம்ப்ளியையோ பாதிக்கவில்லை என்பது தான் இதில் விசேஷம். ஏனெனில் சிறு வயதிலிருந்தே ஒருவர் மற்றவரின் வெற்றியைப் பார்த்து பொறாமைப் படாமல், பெருமைப்படுவதற்குப் பழகிய நண்பர் கள் அவர்கள். இரண்டு பேரில் யாருடைய வெற்றியானாலும் அதை இருவரும் பகிர்ந்துகொண்டு சந்தோஷப் படுகிற குணம், அவர்களைக் கலைத்துவிடாமல் காப்பாற்றியது.

இந்திய அணியின்அடுத்த கிரிக்கெற் பயணம்இலங்கைக்கு. அதற்கான அணி தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ஓர் எதிர்பார்த்த அறிவிப்பு- இருபது வயது சச்சின், இந்திய அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தான்!

### 12 .முதல் நிலைக்கு அசுரப் பாய்ச்சல்

1993-94 ஆண்டுகள் பல விதங்களில் சச்சினுக்கு முக்கியமானது. குறிப்பாக 1994இல் மொத்தம் இருபத்தைந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடிய சச்சின் குவித்த ரன்கள் 1089. இது தவிர ஏழு டெஸ்ட் போட்டிகளில் எழுநூறு ரன்கள்! 'பையன் நன்றாக விளையாடுகிறான்' என்று உரிமையோடு செல்லமாகச் சொல்லி மகிழ்ந்த இந்திய, பிற நாட்டு ரசிகர்கள் சச்சினை அண்ணாந்து பார்த்து "அற்புதமாக விளையாடுகிறார்" என்று மரியாதையோடு வியக்கத் துவங்கியது இதற்குப் பிறகுதான்!

இப்போதும் அமுல்பேபி தோற்றத்தில், கன்னத்தைப் பிடித்து கிள்ளத் தோன்றும் அளவு குழந்தையாக இருக்கிற சச்சினை, 'அவர்', 'இவர்' என்றெல்லாம் எழுத மனசு ஒப்புக் கொள்ளவில்லை தான். ஆனால் முக்கியமான இந்தக் கூட்டத்திற்குப் பின்னர், கிரிக்கெற்றில் சச்சின் செய்திருக்கிற சாதனைகளை, சிரமப்பட்டு ஏறி இருக்கிற சிகரங்களையெல்லாம் யோசித்துப் பார்க்கிற போது, இனி நாமும் சச்சினை 'அவர்' என்றே மரியாதையோடு அழைக்க வேண்டியிருக்கிறது!



இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய அணிக்கு முதல் வேட்டை ஹீரோ கோப்பை! ஒரு பேட்ஸ்மேன் என்ற முறையில் ஹீரோ கோப்பை போட்டிகளில் சச்சின் அவ்வளவாக சோபிக்கவில்லை தான். ஆனால் இந்தத் தொடரின் போது தான் கேப்டன் அஸாருதீன், சச்சினை தொடர்ந்து பந்துவீச்சுக்குப் பயன் படுத்திக்கொண்டார். அநேக மாக எல்லாப் போட்டிகளிலும் பந்து வீசிய சச்சின், அவ்வப்போது முக்கியமான விக்கெற் களையும் எடுத்துக் கொண்டிருந்தார்.

"சுழற்பந்து வீச்சாளர்" என்று சச்சின் பொதுவாக வர்ணிக்கப்பட்டாலும், மற்ற ஸ்பின்னர்களுக்கும் சச்சினுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. ஒரு கும்ப்ளேவையோ, வெங்கடபதி ராஜுவையோ, இப்போதைய ஹர்பஜனையோ எடுத்துக்கொண்டால் அவர்களிடம் நிஜமாகவே ஒரு பந்தைச் சுழற்றுகிற லாவகம் இருப்பதையும், எந்தப் பந்து எப்படித் திரும்பும் என்று கணிக்கிற துல்லியத்தையும் பார்க்கமுடியும். சச்சினிடம் இந்தத் திறமை குறைவு தான். ஆனால் ஒரே ஓவரில் பல் வேறுவிதமான பந்துகளை மாற்றி மாற்றி வீசுவதால், சச்சினின் பந்துகளை ஊகிப்பது கடினம். அடுத்து வரப்போவது லெக் ப்ரேக்கா, அல்லது கூக்ளியா அல்லது இரண்டுமில்லாத ஃபுல் டாஸா என்று தீர்மானிக்க முடியாமல் எரிச்சலடையும் எதிரணி பேட்ஸ்மேன்கள், இலக்கு இல்லாமல் பேட்டைச் சுழற்றி அல்லது தப்பான இடத்தில் பந்தைத் தொட்டு ஆட்டம் இழப்பது, சச்சினின் புத்திசாலித்தனத்துக்குக் கிடைக்கிற பரிசு! சச்சினின் இந்த விநோதமான திறமையைக் கண்டு பிடித்து, முழுமையாகப் பயன்படுத்தியவர் கேப்டன் அஸாருதீன். ஏற்கனவே ஒரு முறை ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பென்ஸன் - ஹெட் ஜஸ் தொடரின் போது முக்கியமான கடைசி ஓவரை சச்சினிடம் நம்பிக்கையோடு கொடுத்து, அதனால்தோற்க வேண்டியஒரு போட் டியை "டை" செய்த அனுபவம் அஸா ருக்கு உண்டு. ஆகவே ஹீ" ரோ கோப் பை ஆட்டங்களில் தனது அதிர்ச்சி ஆயுதமாக, "பவுலர்" சச்சினை உபயோகப்படுத்திக்கொண்டிருந்தார் அஸாருதீன். இதனால் சச்சினுக்கும் மெல்ல மெல்ல தனது பந்து வீச்சுத் திறமையின் மேல் நம்பிக்கை உண்டனாது. அஸாருதீனின் புத்திசாலித் தனமான இந்த உத்தியும், சச்சினின் தைரிய மான அணுகுமுறையும் தென் ஆபிரிக்க அணிக்கு எதிரான ஹீரோ கோப்பை அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு ஒரு அபூர்வ மான வெற்றியைத் தேடித் தந்தது!

இன்றைக்கும் கிரிக்கெற் ரசிகர்களால் திகைப்போடு நினைக்கப் படுகின்ற அந்தப் போட்டி, 1993 நவம்பர் 24ஆம் திகதி கல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்று முதலில் ஆடிய இந்தியஅணி 195 ரன்களே எடுக்க முடிந்தது. அதில் தொண்ணூறு ரன்கள் ஈடன் கார் டன்ஸின் செல்லப் பிள்ளையான அஸாருதீன் சேர்த்தவை. சச்சினின் பங்கு வெறும் பதினைந்து ரன்கள்! பலமான பேட்டிங் வரிசையைக் கொண்டிருந்த தென் ஆபிரிக்க அணி, வெற்றி இலக்கான 196 ரன்களை மிக எளிதில் எடுத்துவிடும் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால்அந்த அணியின் விக்கெற்கள் சீரான இடைவெளியில் சரிந்துகொண்டிருந்தன. கும்பளேயும் அஜய் ஜடோஜாவும் அற்புதமாகப் பந்து வீசி ரன்களை கட்டுப்படுத்தினார்கள். ஒரு கட்டத்தில் 145 ரன்களுக்கு ஏழு விக்கெற்றுகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்தது தென் ஆபிரிக்க அணி.

(தொடரும்)

## நிதியமைச்சின் ஊழியர்கள் வாக்களிக்க விசேட ஒழுங்கு

(கொழும்பு)

தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்றுள்ள நிதியமைச்சின் ஊழியர்களுக்கு பிறிதொரு நாளில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது.

இதற்கமைய நிதியமைச்சின் ஊழியர்கள் எதிாவரும் 9,10 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வரவு செலவுத்திட்டம் எதிர் வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதால் பாதுகாப்புத் தொடர்பான சிக்கலைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித் துள்ளார்.

நிதி அமைச்சின் பணிப்பாளர் தமது ஊழியர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க பிறிதொரு நாளை வழங்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் ஏனைய துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நவம்பர் 7,8ஆம் திகதி களில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ந-9)

## தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க பரிந்துரை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியல் பழிவாங்கல்களில் இருந்து பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டும் என்று அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார். எதிர்வரும் 24ஆம் திகதியுடன் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவடையவுள்ளது.

எனவே தேர்தல் முடிவடைந்ததும் சகல பொலிஸாருக்கும் ஆணைக் குழுவின் ஒத்துழைப்புக் கிடைப்பதுடன் அவர்களுக்கு முறையான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ந-9)

## பருத்தித்துறை மற்றும் தம்பசிட்டியில் தவணை முறையில் வைத்திய சேவை

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் மத்திய சித்த ஆயுள்வேத மருந்தகம் பருத்தித்துறை நகரில் வாரத்தில் 3 தினங்களும்; தம்பசிட்டியில் ஏனைய 3தினங்களும் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஆரம்பத்தில் பருத்தித்துறை நகரத்தில் திறந்து வைக்கப்பட்ட இம் மருந்தகம் சில தினங்களின் பின் தம்பசிட்டிக்கு மாற்றப்பட்டது.

இதனை பருத்தித்துறை நகர மக்கள் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து பருத்தித்துறையிலும் தம்பசிட்டியிலும் இம் மருந்தகத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வடக்கு கிழக்கு மாகாண சுதேச வைத்திய பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத் திருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுதேச வைத்திய பணிப் பாளர் டாக்டர் திருமதி சி.தர்மராசா இம் மருந்தகத்தை பருத்தித் துறையில் பிரதி திங்கள்,புதன், வெள்ளி ஆகிய தினங்களிலும் தம்பசிட்டியில் பிரதி செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களிலும் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய பருத்தித்துறையில் 3 தினங்களும் தம்பசிட்டியில் 3 தினங்களும் இவ் ஆயுள்வேத மருந்தகம் இயங்கத்தொடங்கியுள் ளது.

(ந-35)

## பறவைக்காய்ச்சல் இங்கு பரவுவதை தடுக்க தேசிய நடவடிக்கை கமிட்டி அமைக்கப்படும்

(கொழும்பு)

பறவைக்காய்ச்சல் இலங்கையில் பரவுவதைக் தடுக்கவென தேசிய நடவடிக்கைக் கமிட்டி ஒன்றை நியமிப்பதற்கு சுகாதாரப் பராமரிப்பு போசாக்குத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பறவைக்காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் முறையாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டே இக் கமிட்டி அமைக்கப்படவிருப்பதாக அமைச்சின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பரவிவரும் பறவைக்காய்ச்சல் இலங்கையில் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இம் முன்னேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் என்பவற்றின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிகள், கால் நடைவளர்ப்பு, சுகாதார சேவைகள பணிப்பாளர் நாயகம், நோய் பரவுகைத் தடுப்புப்பிரிவு பணிப்பாளர் ஆகியோரை உள்ளடக்கியே இக் கமிட்டி அமைக்கப்படவுள்ளது.

அதே நேரம் அரச சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர், வெளிவிவகார அமைச்சுப் பணிப்பாளர் நாயகம், உட்பட ஊடக, நிதி, உல்லாசப் பயணத்துறை ஆகிய அமைச்சுக்களின் பிரதிநிதிகளும் இக் கமிட்டியில் உள்ளடக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலுள்ள வாக்காளர்களுக்கு விசேட போ/வ ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பதற்கு தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என உதவி தேர்தல்கள் ஆணையாளர் ரஞ்சித் பீரிஸ் தெரிவித்தார்.

இந்த வாக்குச் சாவடிகளில் நிலைமைகளை அவதானிப்பதற்கு தேர்தல் கண்காணிப்பாளர்களை தேர்தல் ஆணையாளர் நியமிக்கவுள்ளார். இதேவேளை, இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு தபால் திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 30இலட்சத்து 27ஆயிரத்து 160 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும், தபால் மூல வாக்காளர்கள் 3 இலட்சத்து 23ஆயிரத்து 28 பேர் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-9)

இறுதியில் இலட்சியத்தை அடைவிக்கும் காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது, செய்யும் ஒவ்வொரு காரியமுமே ஓர் இலட்சியமாய் இருத்தல் வேண்டும். -கெதே-

வலம்புரி

## நாடு பிளவு படுவதைத் தடுப்பதில் தென்பகுதி புத்தி ஜீவிகள் தீவிரம்

ஜனாதிபதித்தேர்தல் தென்னிலங்கையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அனுகுமுறையே குழப்பத்திற்கான காரணமாகும்.

அதாவது தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் காரணமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிராந்தியமொன்று ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையில் இறைமையுள்ள ஆட்சி நடைபெறுவதாக வெளியில் கூறிக்கொண்டாலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயத்தில் கணிசமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இவ் விதம் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிராந்தியமொன்றை பல ஆண்டுகளாக வைத்திருப்பது உலகில் உள்ள எந்த விடுதலை அமைப்பிடமும் இல்லாத சிறப்பாக அமைந்துள்ளது.

விடுதலை வேண்டிப்போராடும் இனமொன்று தனது கட்டுப்பாட்டிற்குள் பிராந்தியப்பரப்பொன்றை நீண்ட காலம் வைத்திருக்குமாயின் அந்த இனம் வேண்டி நிற்கும் தனி நாட்டை அங்கீகரிக்கும் சாத்தியப்பாடுகள் ஐ.நா.சபைபோன்ற அமைப்புகளிடம் உண்டென்பது அரசியல் வல்லுநர்களின் கருத்து.

அவ்வகையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

இந்நிலையிலேயே விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்ற ஊக்கம் தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டது.

அதன் ஒரு கட்டமாக யுத்த நிறுத்த உடன்படிக்கை தோற்றம் பெற்றது. இவ்வாறு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்வதற்கு காரணமாக இருந்தவர்களில் தென்னிலங்கை புத்தி ஜீவிகளுக்கும் இடமுண்டு.

நாடு பிளவுபடப்போகின்றது இனியும் தாமதிப்பீர்களாயின் இலங்கை இரண்டாக பிளவு படுவதைத் தடுப்பதை தவிர்க்க முடியாது போகும் என்றவாறு தென்னிலங்கை புத்திஜீவிகள் அபாய அறிவிப்பை விடுத்தனர்.

இதனால் விழிப்படைந்த ஆட்சியாளர்கள் சமாதானம் என்ற பேச்சின் ஊடாக உலநாடுகளை சமாளிக்க முற்பட்டனர். பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடன்பட்டது கூட மேற்படி எச்சரிக்கை காரணமாகவே என்பது அரசியல் வல்லுநர்களின் கருத்து.

இவ்வாறு நாடு பிளவுபடுவதை 'சமாதானம' என்ற நாடகத்தின் மூலம் தடுக்க முற்பட்ட தென்னிலங்கை புத்திஜீவிகளின் திட்டத்தை தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் தவிடுபொடியாக்கிவிட்டது.

ஆம், இனவாதம் பேசிய ஜே.வி.பியுடன் மகிந்த கூட்டுச்சேர்ந்துள்ளதால் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு இலங்கை ஆட்சியாளர்கள் தீர்வு காண்பது சாத்தியமல்ல என்ற உண்மையை உலகநாடுகள் உணர்ந்து கொள்ளத் தொடங்கி விட்டன.

இந்நிலையில் மகிந்த வெற்றி பெற்றால் நிலைமை மோசமாகும் என்ற பயத்தால் தென்னிலங்கை புத்தி ஜுவிகள் ஓடித்திரிகின்றனர் அவ்வளவு தான்.

## (உ/த) இல் சித்தியடைந்த மாணவர்களுக்கு
# பட்டப்படிப்புக்கு உதவி வழங்க 8 வெளிநாடுகள் முன் வருகை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இலங்கை மாணவர்களுக்கு பட்டப்படிப்புக்கான உதவிகளை வழங்க 8 வெளிநாடுகள் முன்வந்துள்ளன.

சீனா,இந்தியா, ரஷ்யா,பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈராக்,கியூபா,துருக்கி ஆகிய நாடுகளே 2006ஆம் கல்வியாணடுக்கு புலமைப்பரிசில் அடிப்படையில் இலங்கை மாணவர்களை சேர்த்துக் கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சின் பதில் செயலாளர் எஸ்.எல. குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பௌதிக விஞ்ஞானம்,மருத்துவம்,பொறியியல்,விவசாயம், பொருளாதாரம்,முகாமைத்துவம்,சித்திரம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர்தரப் பரீட்சையில் பெற்றுள்ள புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் இதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.ஆங்கில மொழியில் கூடிய தேர்ச்சியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் தம்மை பதிவு செய்யாத மாணவர்களுக்கு மட்டுமே இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

உரிய தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு எஸ.எல.குணவர்த்தன அறிவித்துள்ளார். (ற-8)

# இரண்டாம் நிலைத் தளபதி யார்? கடற்படையில் தொடரும் குழப்பம்

(கொழும்பு)

கடற்படையின் 2ஆம் நிலைத்தளபதி யார் என்பதில தொடர்ந்து குழப்பங்களும் முரண்பாடுகளும் அதிகரித்து வருகின்றன.

கடற்படையின் 3ஆம் நிலைத் தளபதியாக இருந்த வசந்த கரன்னகொட கடற்படைத் தளபதியாக நியமிக்கபபட்டதில் 2ஆம் நிலைத் தளபதியாக இருந்த மொகான் விஜயவிக்கிரம கடும் அதிருப்தியடைந்திருந்தார்.

தனக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வு நிராகரிக்கப்பட்டது தொடர்பாக அவர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந் நிலையில், வசந்த கரன்னகொடவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கரன்னகொட பதவியேற்ற நாள் முதல் தான் ஓய்வுபெற உள்ள நவம்பர் 24ஆம் நாள் வரை 84 நாள்கள் விடுப்பில் சென்றுவிட்டார் மொகான் விஜயவிக்கிரம்.

தற்போது மொகான் விஜயவிக்கிரமவின் இடத்திற்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக பாரிய குழப்பங்கள் கடற்படையில் நீடித்து வருவதாகத் தெரிகிறது.

2ஆம் நிலைத் தளபதியாக ரியர் அட்மிரல் சரத் ரட்ண கீர்த்தியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வசந்த கரன்னகொட முதலில் பரிந்துரைத்துள்ளார். ஆனால் அதை நிராகரித்த ஜனாதிபதி மேலும் சில அதிகாரிகளை பரிந்துரைக்குமாறு அவரிடம் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து சரத் ரட்ண கீர்த்தி, சரத் வீரசேகர, நந்த தண்டுவெளத்த, தர்மப்ரிய மற்றும் வசந்த தென்னக்கோன் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட உள்ளிட்ட இரு அதிகாரிகளுக்கு அண்மையில் இரு ஆண்டுகள் பணி நீட்டிப்பு அளிக்கப்பட்டதையடுத்து இராணுவத்தின் முப்படைகளிலும் பாரிய விசனங்கள் எழுந்துள்ளன. மேஜர் ஜெனரல்களின் ஓய்வு வயது 58 ஆகவும், பிரிகேடியர்களின ஓய்வு வயது 57 ஆகவும், கேணல்களின் ஓய்வு வயது 56 ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்த பின்னரே இது நடைமுறைப்படுத்தப்படும். இருப்பினும் இத்தகைய ஓய்வு வயது அதிகரிப்பால் இளம்நிலை இராணுவத்தினருக்கான பதவி உயர்வுகள் மறுக்கப்படும் என்றும் இதனால் தாங்கள் இராணுவத்தின் உயர் பதவிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படும் என்றும் முப்படையினரும் கடும் விசனததல உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

## வணிகர் கழகத்தின் வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் ஊழியர் சேமலாப நிதி,ஊழியா நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியன செலுத்திய அநேக தொழிலாளர் தாம் செலுத்திய நிதி சம்பந்தமான ஆண்டு விபரத்திரட்டு விபரங்களையும் அதன் பின் தாம் இளைப்பாறிய பின்னர் தாம் செலுத்திய நிதியினை மீளப் பெறுவதிலும் ஊழியர் சேமலாப நிதிக் கொடையினை இதுவரை பெறமுடியாதும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இது விடயமாக யாழ். வணிகர் கழகம அரசாங்க அதிபர் ஊடாக துரித நடவடிக்கை எடுகக உதசேித்துள்ளது.

இதனால் இதுவரை ஊழியா சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியன செலுதததி அதற்கான ஆண்டு விபரத்திரட்டினைப் பெறாதவர்களையும் மீளக் கொடுப்பனவுகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்பவாகளையும் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.வணிகர்கழகம் கேடடுள்ளது. (ற)

## 17 இரட்டைத் தட்டு பஸ்கள் இரு வாரங்களில் சேவையில்!

(கொழும்பு)

வர்த்தக வாணிப அமைச்சினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்ட 17 இரட்டைத்தட்டு பஸ்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக வாணிப அமைச்சுக்கு வெளிநாடுகளில் இருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பெறற 17 இரட்டைத்தட்டு பஸ்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புளளேயினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

ஜப்பானிலிருந்து இம்மாத இறுதிக்குள் 108 பஸ்கள் இலஙகைக்கு இறக்குதி செய்யப்படவுள்ளன. இவ் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கான வீதிகளை இலங்கை போக்குவரத்துச் சபை தீர்மானித்து வருகின்றது.

மேலும்,நவம்பர் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து 300 பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன்,இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களில் பயணச் சீட்டு இல்லாது பயணம செய்வோருக்கான தண்டப்பணம் 250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் பயணச்சீட்டு இல்லாது பயணம் செய்தோருக்கான தண்டப்பணம் 100ரூபாவாக அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

## கைதான தேசப்பற்றுள்ள இயக்கத்தினர் 12 பேரும் பிணையில் விடுதலை

(கொழும்பு)

கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய போது கைதுசெய்யபபட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்க உறுப்பினர்கள் 12 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவின் தேர்தல் அறிக்கையில் இராணுவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தேசப்பற்றுள்ள இயக்கத்தினர் கடந்த 25ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பொலிஸாரது கடமையைச் செய்யவிடாது தடுத்த 2 பிக்குகள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டனர். இதன் போது கைதுசெய்யப்பட்டோர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருப்பதாக கோட்டைப் பொலிஸார் வெள்ளிக்கிழமை கோட்டை நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அனுமதி பெறாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்ததாகவும அதனைப் பொருட்படுத்தாது அவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்ததால் தாங்கள் குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகத் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 629 சுவரொட்டிகள், ஓட்டோ ஒன்றும் மற்றும் இரு மோட்டார் வாகனங்களை வழக்கு தடயப்பொருட்களாக நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்தனர். இவ் வழக்கின் விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி,சந்தேக நபர்களை எச்சரித்து பிணையில் விடுதலைசெய்ய அனுமதியளித்தார்.(ற-4)

### தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



**கொடுப்பதற்கு என்னிடம் பணம் இல்லை. கற்பதற்கான அறிவு என்னிடம் இல்லை. யோகம் செய்ய நேரம் இல்லை இறைவா! எனது உடல் ,மனம் அனைத்தையும் உன்னிடம் நான் ஒப்படைத்துவிட்டேன்.**

சுவாமி விவேகானந்தர்

# பிரதமரின் யாழ்.வருகையை பகிஷ்கரிக்குமாறு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வேண்டுகோள்

பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ வின் யாழ்.வருகையை பகிஷ்கரிப்போம் என தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் அறி வித்துள்ளது. இது தொடர்பான அறிக்கை யொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வாக்கு வேட்டைக்காக யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இணைந்து வாழ்வதாயின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்துடன் வாழ்வது அல்லது பிரிந்து செல்வது என்ற இரு வாய்ப் புக்களை மட்டுமே வழங்கத் தயாராக இருக் கும் மக்களிடம் இவர்கள் தமது ஒற்றையாட்சி சிந்தனையை உபதேசிக்கப்போகின்றனரா?.

பதவிக்காகவும், பணத்திற்காகவும் ஆலாய் பறக்கும் தென்பகுதி வாக்காளர்கள் சிலர் போல எம்மையும் எண்ணி விட்டனர்.

ஆனால் 'நாம் அந்த வாக்காளர்கள் போல் ஏமாளிகளும் அல்ல. முன்பு போல் பொறு மைசாலிகளும் அல்ல' என அவர்களிடம் அறைந்து சொல்வோம். எனவே எம் இனிய யாழ்.குடாநாட்டு மக்களே ஜனாதிபதித் தேர் தலை பகிஷ்கரிக்க தமிழர்தேசம் தயாரிகி விட்ட செய்தியால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இலா பமீட்டலாம் என கருதி யாழ்ப்பாணத்தில் வாக்கு வேட்டைக்காக வருகை தரும் பிரதமரின் வருகை யை பகிஷ்கரிப்போம் என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இராணுவப் புலனாய்வுத்...

கேணலாக பதவி உயர்வு வழங்கப்பட விருந்ததாக தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான பல்வேறு தாக்குதலுக்கு இவர் தகவல் கொடுத்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

ரிஸ்வியின் கொலைச் சம்பவத்தினைய டுத்து அவர் சுடப்பட்ட இடத்தினைச் சூழவுள்ள பகுதிகள் நேற்று தீவிர சோதனைக்கு உட்ப டுத்தப்பட்டது.

அத்துடன் இறுதிநிகழ்வுகள் மாகொடையில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்றது. இதே வேளை சம்பவ நேரத்தில் ரிஸ்வியுடன் இருந்த அவரது நண்பரைத்தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுத்துறையின் முக் கிய அதிகாரிகளில் ஒருவராக விளங்கிய ரிஸ்வி மீடின் அமெரிக்கா, பாகிஸ்தான், போன்ற நாடுகளிலும் ஹவாய்த்தீவிலும் விசேட பயிற்சி பெற்றவர் என தெரிவிக்கப் பட்டது. (ச-8-4)

## கைக்குண்டுத் தாக்குதலில் சகோதரிகள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் விசேட அதிர டிப் படையின் முகாமுக்கு அருகில் உள்ள வீடொன் றின் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பிற்பகல் 5.30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சகோதரிகள் இருவர் படு காயம் அடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள னர். நவரட்ணம் புஸ்பமாலா (வயது 34), நவ ரட்ணம் ஜெசிந்தா வயது (வயது 16) ஆகிய இரு வருமே படுகாயம் அடைந்தவர்களா வர். (ச-4)

## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வடக்குக்கிழக்குக்கு அனுப்பப்படுவர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் கண்காணிப்பா ளர்களாக பணியாற்றவுள்ள வெளிநாட்டவர் களில் பெரும்பாலானோர் வடக்குக் கிழக் குப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள் ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு பணி களுக்காக சுமார் 150 வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர். இந்த நிலை யில் 50 வீதமானோரை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பணியாற்றுவதற்கு அனுப்ப வுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித் துள்ளது. (ச-4)

## அரசடியில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அரசடிச் சந்தியில் உள்ள இரா ணுவமுகாமிற்கு அருகாமையில் வெடிக் காத நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டது.

இக்குண்டு நேற்று முன்தினம் இனந்தெரி யாதோரால் வீசப்பட்டு வெடிக்கவில்லை என இராணுவத்தினர் தெரிவித்தனர். அக்கைக் குண் டை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரும் சென்று பாவையிட்டனர்.

மீட்கப்பட்ட அக்கைக்குண்டைச்சுற்றி இராணுவத்தினர் மண்மூட்டையினை அடுக் கியுள்ளனர். (ச-19)


அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வலம்புரி

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி



திருமணக்கார் [குளிரூட்டியது]

வாடகைக்கு



☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)

☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக் கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சார தியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P:0777-903090இ 077-3086939இ0777-246117இ 077-6018467

(c-அ1699)


## மோ.சைக்கிளிலிருந்து வீழ்ந்து மூதாட்டி படுகாயம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்த மூதாட்டி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். இச்சம்வம் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப மூதாட்டி மோட்டார் சைக்கிளில் சென்று கொண் டிருந்த, போது மோட்டார் சைக்கிள் செலுத்திக் கொண்டிருந் தவரின் தலைக்கவசம் கழன்று வீழ்ந்தது. அவ் வேளையில் தலைக் கவசத்தை பிடிக்க முற்பட்ட மூதாட்டி தரையில் வீழ்ந்தார்.

தலையில் படுகாயம் அடைந்த அவர் சாவகச்சேரி வைத்தி யசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். இச்சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த திருநா வுக்கரசு புவனலட்சுமி (வயது 69) என்பவர் படுகாயம் அடைந் தவராவார். (ச-108)

## கடலில் குளிக்கச்சென்றவரை அலையடித்து சென்றது

(காலி)

காலிமுகத்திடல் கடலில் குளிக்கச்சென்ற ஒருவரே அலை யில் சிக்கிக் காணாமல்போயள்ளார். குளிக்கச்சென்ற இருவர் வீடு திரும்பியுள்ளனர்.

கடற்படையினரின் உதவியுடன் காணாமல்போனோரை தேடும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. (ச-8)

## வாகரையில் புலிகள் மீது...

மூவர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தாக் குதலை மேற்கொண்டோர் கருணா குழுவைச்சேர்ந்தவர்கள். கொல்லப்பட்ட தமது உறுப்பினரையும் காயம் அடைந்த மேலும் மூவரையும் தூக்கிக்கொண்டு அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் பக்கம் தப்பிச்சென்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-4)

## பெற்றோல் குண்டு...

அங்கு சிகிச்சை பலனளிக்காது தம்பதியர் இருவரும் உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-8)

## கோண்டாவில் தபால்....

மீதே தாக்குதல் தடத்தப்பட்டுள்ளது.மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படு கிறது.

படுகாயமடைந்த இரண்டு பொலிஸாரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்னர். இராணுவச் சிப் பாய் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பியதாஸ் (வயது 52), பண்டார (வயது 36) ஆகிய இருவருமே காயமடைந்தவர் களாவர். (ச-4)


மனோகரா யாழ்.

யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்




விஜய் + அசின்

கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30 (பு.நே)

சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா சினிமா

இந்தியாவிலும் யாழ்ப்பாணம் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு



பாலுமகேந்திரா கதை, வசனத்தில்

இளையராஜா இசையில்

தனுஷ், பிரியாமணி மற்றும் பலர் நடித்த

அது ஒரு கனாக்காலம்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சிம்ரன், மணிவண்ணன் நடித்த

துள்ளாத மனமும் துள்ளும்

கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)



SWISS Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.